# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**

**திருமறைத்தீபம்**

**Issue No. 4 of 2021**

**ISBN 1173-7255**



இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப் படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.



**ஆசிரியர்: ஆர். பாலா**

**Editor:** R. Bala

**Sovereign Grace Publications**
P O Box 62 159, Sylvia Park,
Auckland 1644, New Zealand
+64 9 272 8061
biblelamp1995@gmail.com
www.biblelamp.org

**Reformed Publications**
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar,
Ayanavaram,
Chennai 600023. South India.
+91 9445671113


“சத்தியத்தைக் கபடமில்லாமல் எடுத்துக்கூறாமலும், கொள்கைப் பஞ்சத்தோடும் இருக்கும் பத்திரிகையை இலக்கியத்தொல்லை என்றுதான் கூறவேண்டும்.“

சி. எச். ஸ்பர்ஜன் (1834-1892)

# வாசகர்களே!

வணக்கம் வாசகர்களே! தொடர்ந்தும் திருமறைத்தீபம் உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்து வருகிறது என்று நம்புகிறேன். கோவிட்-19 தொடர்ந்து உலகத்தை மாற்றி அமைத்துக்கொண்டிருக்கும் இந்த நாட்களில் கர்த்தரின் கிருபையால் இன்னுமொரு இதழைத் தயாரித்து உங்கள் முன் படைக்க முடிந்திருக்கிறது. கர்த்தர் உங்களைப் பாதுகாத்து வழிநடத்திக்கொண்டிருக்கிறார் என்று நம்புகிறேன்.

இந்த இதழின் வரலாற்றுக் கல்வினிசத்திற்கும், கல்வினிச ஐம்போதனைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அருமையான முறையில் விளக்கியிருக்கும் ஜே. ஐ. பெக்கரின் ஆக்கத்தின் ஒரு பகுதியை என் வார்த்தைகளில் தந்திருக்கிறேன். இது சிந்தித்துப் பொறுமையோடு வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டிய ஆக்கம். கல்வினிசம் பற்றிய இந்தப் புரிதல் அநேகருக்கு இல்லாமல் இருக்கிறது. வாசித்துப் பயனடையுங்கள்.

இதையடுத்து போலிப்போதனைகளின் தன்மையையும், அதனால் ஏற்படும் ஆபத்துக்களையும் சுட்டிக்காட்டி, போலிப்போதனைகளுக்கு விலகி நிற்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் ஒரு ஆக்கம் வந்திருக்கிறது. போலிப்போதனையை மெய்ப்போதனையிலிருந்து பிரித்து இனங்கான முடியாத நிலையிலேயே இன்று பெரும்பாலானோர் நம்மினத்தில் இருந்து வருகிறார்கள். அது எத்தனை ஆபத்து தெரியுமா? ஒரு பிரசங்கமும், போதனையும் நூறுவிகிதம் அருமையானதாக இல்லாமல் இருந்துவிடலாம். ஆனால், பிரசங்கமும், போதனையும் போலிப்போதனையாக இருந்துவிடக்கூடாது. போலிப்போதனைகள் விஷத்தைப் போன்றவை. அவை சத்தியத்துக்கு முரணானதை நம்முன் வைப்பவை. நீங்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரோடு இருந்துவிடுவது மட்டும் உங்கள் பரலோகப் பயணத்திற்கு உதவாது; போலிப்போதனையை இனங்கண்டு தவிர்த்து இருதயத்தை சத்தியத்தால் மட்டுமே பாலூட்டி வளர்க்கிறவர்களாக இருக்கவேண்டும். அதுவே கர்த்தருக்கு மகிமை தரும்.

பாவத்தின் பாவம் என்ற ரால்ப் வென்னிங்கின் நூலின் ஒரு பகுதி இதில் வந்திருக்கிறது. பாவத்தின் கோரமுகத்தை கிழித்துக்காட்டும் இன்னுமொரு அருமையான பகுதி இது. பியூரிட்டன்களால் அல்லாமல் வேறு எவரால் இப்படி விளக்கமுடியும்? இதையும் வாசித்து இருதயத்தை ஆராய்ந்து பாவம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். – ஆர்

# வரலாற்றுக் கல்வினிசமும், கல்வினிச ஐம்போதனைகளும்


– ஜே. ஐ. பெக்கரின் விளக்கம் –



(கிறிஸ்தவ வரலாற்றில் கல்வினிசம் என்ற பெயரில் பொதுவாக அழைக்கப்பட்டு வந்திருக்கிற சீர்திருத்த இறையியல் பற்றி ஜே. ஐ. பெக்கர் வரைந்துள்ள ஆக்கம் இது. பெக்கர் இந்த ஆக்கத்தை தத்துவார்த்த ரீதியில், வாதப்பிரதிவாதங்களோடு எழுதியிருப்பதால் நம்மினத்துக் கிறிஸ்தவர்களுக்கு அதைப்புரிந்துகொள்வது கொஞ்சம் இடறலானதாக இருக்கும் என்பதால் ஆங்காங்கு என் வார்த்தைகளில் அதை விளக்கியிருக்கிறேன்; பெக்கரின் சிந்தனைப் போக்கிற்குத் தடையேற்படாதபடி அவருடைய எழுத்தை அப்படியே தந்திருக்கிறேன். ஆக்கம் முழுவதும் 'கல்வினிசம்' என்ற பதத்தைப் பயன்படுத்திப் பெக்கர் சீர்திருத்த இறையியலையே (Reformed Theology) விளக்குகிறார் என்பதை வாசகர்கள் நினைவில் வைக்கவேண்டும். கல்வினிசம் எனும் முழுமையான சீர்திருத்த இறையியலை அவர் 'கல்வினிச ஐம்போதனைகளில்' இருந்து வேறுபடுத்தி, கல்வினிச ஐம்போதனைகளின் குறைபாட்டை இந்த ஆக்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார். கல்வினிச ஐம்போதனைகளை மட்டுமே முழுமையான சீர்திருத்த இறையியலாகக் கருதுவதன் ஆபத்தை அவர் இந்த ஆக்கத்தில் விளக்கியிருக்கிறார். இன்று புதிதாக சீர்திருத்த போதனைகளைக் கற்றுக்கொள்ளுபவர்கள் இதை உணரவேண்டியது மிக அவசியம். சீர்திருத்த இறையியல், கல்வினிசம் ஆகிய பதங்களையும் இறையியல்பூர்வமாக சரியாகப் புரிந்துகொண்டு பயன்படுத்தவும் இது துணைபுரியும்.)

---

*அநேக வருடங்களுக்கு முன் 1959ல் பேனர் ஆவ் டுருத் பியூரிட்டன் ஜோன் ஓவனின் நூலான* The Death of Death in the Death of Christ *(கிறிஸ்துவின் மரணத்தில் மரணத்தின் மரணம்) எனும் ஆங்கில நூலை முதன் முதலாகப் பிரசுரித்தபோது அந்நூலுக்கு அறிமுகமாக ஜே. ஐ. பெக்கரின் அறிமுகத்தையும் நூலோடு இணைத்துப் பிரசுரித்தார்கள்* (Introduction to the Death of Death in the Death of Christ). *அந்த அறிமுகம் 25 பக்கங்களைக் கொண்ட நீண்ட அறிமுகம். ஜோன் ஓவன் தன் படைப்பில் கிறிஸ்துவின் மரணத்தின் பலனைச் சகல உலக மக்களும் பொதுவாக அடைந்து அனுபவிப்பார்கள் என்ற உலகளாவிய இரட்சிப்பு* (Univeral Salvation) *எனும் போதனைக்கு எதிரான வாதங்களை முன்வைத்து, கிறிஸ்துவின்*



சிலுவைப்பலி கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்பதை விளக்குவதாக இருந்தது. இந்தப் போதனைபற்றி விளக்கும் நூல்களில் அதிமுக்கியமானது ஜோன் ஓவனின் படைப்பு. ஜோன் ஓவன் தன் ஞானமனைத்தையும் பயன்படுத்தி தகுந்த வேதஆதாரங்களை முன்வைத்து நூலில் கிறிஸ்துவின் பலி எல்லோருக்குமானதல்ல என்பதை அருமையாக விளக்கியிருந்தார். ஜே. ஐ. பெக்கர் சொல்லுகிறார், 'அசைக்கமுடியாத ஆணித்தரமான ஓவனின் வாதங்களை வாசிக்கும் சிலர் அதிர்ச்சியில் புத்தகத்தை வாசிப்பதைக்கூட நிறுத்திவிடலாம்' என்று. இதை அவர் உலகளாவிய இரட்சிப்பு எனும் போதனையைப் பின்பற்றுகிறவர்களை மனதில் கொண்டே குறிப்பிட்டிருக்கிறார்.

பெக்கரைப் பொறுத்தவரையில் ஓவனின் நூல் சமகாலத்தில் மறுபடியும் மெய்யான சுவிசேஷத்தை நிலைநிறுத்தப் பேருதவி செய்கிறது. ஓவனின் போதனை கிறிஸ்துவின் மீட்பு யாருக்கு, என்பதைக் குறித்தது; அதற்கும் சுவிசேஷத்திற்கும் என்ன தொடர்பு என்று யாராவது சிந்திக்கலாம். நிச்சயம் பெரிய தொடர்பு இருக்கிறது என்கிறார் பெக்கர். உங்களுடைய சுவிசேஷம் கடவுளுக்கு மகிமை தருவதாக இருக்கவேண்டுமா, மனிதனை மகிமைப்படுத்துவதாக இருக்கவேண்டுமா? கடவுளை மகிமைப்படுத்துவதுதான் உங்கள் நோக்கமாக இருந்தால் ஓவனின் நூலை வாசியுங்கள் என்கிறார் பெக்கர். கடவுளை நம்பக்கூடிய மனிதனின் இயல்பான தன்மை, இரட்சிப்புக்கு மூலகாரணமாக இருக்கும் கர்த்தரின் தெரிந்துகொள்ளுதலையும், கிறிஸ்து தன்னுடைய ஆடுகளுக்காக சிலுவையில் மரித்தது ஆகிய அதிமுக்கிய சத்தியங்களை இன்றைக்கு சுவிசேஷத்தில் பலர் பிரசங்கிப்பதில்லை என்கிறார் பெக்கர். இந்த உண்மைகள் பாவிகளை சங்கடப்படுத்தும், அதனால் இவை பயனற்றவை என்று அவர்கள் தாங்களாகவே முடிவுசெய்து, தங்களுடைய வல்லமையால் கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு இவை பாவிகளுக்குத் தடையாக இருந்துவிடும் என்று கருதி அவற்றை அவர்கள் சுவிசேஷத்தில் சொல்லாமல் மறைத்துவிடுகிறார்கள் என்கிறார் பெக்கர். ஆனால், இந்த சத்தியங்களை அடிப்படையாகக் கொண்டே சுவிசேஷத்தை நாம் பிரசங்கிக்க வேண்டும் என்கிறார் பெக்கர். சுவிசேஷத்தின் அடிப்படை சத்தியங்களை விலக்கிவிட்டு அரைகுறையாக அதைப் பிரசங்கிப்பது மெய்யான சுவிசேஷமல்ல என்று கூறும் பெக்கர், நாம் மறுபடியும் அப்போஸ்தலர் காலத்தில் இருந்து பிரசங்கிக்கப்பட்டு வந்திருக்கும் சுவிசேஷத்தை, வேதபூர்வமான சுவிசேஷத்தை, நம்முடைய பிரசங்கத்தையும் சுவிசேஷ நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் சுவிசேஷத்தை நாம் பிரசங்கிக்க வேண்டும் என்கிறார். இதுவே காலத்தின் கட்டாயமாக இருக்கிறது என்கிறார் பெக்கர். இந்த விஷயத்திலேயே ஓவனின் கிறிஸ்துவின் மீட்பைப்பற்றிய நூல் நமக்கு உதவுகிறது என்கிறார் அவர்.

கடந்த 20ம் நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டிலும் சுவிசேஷம் என்பது, ஆண்டவர் நம்மை நேசிக்கிறார், அவரை விசுவாசித்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டால் உடனடியாகப் பரலோகம் போகலாம் என்ற ஒரே விஷயத்தை திரும்பத் திரும்பக் கோழி கொக்கரக்கோ சொல்லுவதைப்போல அறிவிப்பதாக மட்டுமே இருக்கின்றது. இதற்குமேல்

எந்த வேதஉண்மைகளையும் விளக்கினால் விசுவாசிக்க வேண்டிய பாவிக்கு நாம் அநாவசியமான தடைகளை ஏற்படுத்தி அவனை கிறிஸ்துவிடம் வரவிடாமல் செய்துவிடுகிறோம் என்ற ஆழமான நம்பிக்கை சுவிசேஷ கிறிஸ்தவத்தில் பதிந்து காணப்படுகிறது. இறையியல் போதனைகள் எதையும் கொண்டிராத ஒருவகை அரைகுறை சுவிசேஷமே பிரசங்க மேடைகளை இன்று ஆக்கிரமித்து ஆண்டு வருகிறது. நம்மினத்துக் கிறிஸ்தவத்தில் இதற்குமேல் எதையும் சுவிசேஷப் பிரசங்கத்தில் எதிர்பார்க்க முடியாதிருக்கிறது. ஜே. ஐ. பெக்கரின் ஆக்கம் மேலைத்தேய சுவிசேஷப் பிரசங்கத்தை மனதில் கொண்டு எழுதப்பட்டிருந்தாலும் இந்த நூற்றாண்டில் நம்மினத்துக் கிறிஸ்தவத்தின் நிலைக்கு அப்பட்டமாகப் பொருந்தி வருகிற ஆக்கமாக ஓவனின் நூலுக்கான அவருடைய அறிமுகம் இருக்கிறது.

ஓவனின் நூலின் அருமையை உணராத பலர் கிறிஸ்துவின் மீட்பைப்பற்றிய அவரின் வாதத்தை எதிர்த்து நூலைக் குறைகூறியிருக்கிறார்கள். உண்மையில் அந்தப் போதனையை வெறுக்கிறவர்கள் பலர். அதற்குக் காரணம் நமக்குத் தெரியாததல்ல; அந்தளவுக்கு ஆர்மீனியனிசப் போதனை (செமி–பெலேஜியனிசம்) கிறிஸ்தவ உலகில் பரவி உண்மை தெரியாதபடி அநேகரின் கண்களை மறைத்து வைத்திருக்கிறது. இதை நன்குணர்ந்த ஜே. ஐ. பெக்கர் இந்நூலுக்கான அறிமுகத்தை எழுதி ஓவனின் வாதத்தின் மெய்த்தன்மையை பலரும் அறியச் செய்தார். ஜே. ஐ. பெக்கர் பியூரிட்டன் போதனைகளைக் கரைத்துக் குடித்தவர். அவர் மிகவும் ஆற்றல் மிக்க இறையியலறிஞர். பெக்கரின் இறையியலில் சில விஷயங்களோடு என்னால் ஒத்துப்போக முடியாமல் இருந்தபோதும் இந்த அறிமுகத்தை இத்தனைத் திறமையாக இன்னொருவர் எழுதியிருக்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. பெக்கர் ஒரு சிந்தனாவாதி; எழுத்தாற்றல் படைத்தவர். காரணகாரியங்களோடு உண்மைகளை ஆராய்ந்து நிலைநாட்டுபவர். எல்லாவிஷயங்களிலும் அவருடைய முடிவுகளை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் அவசியம் இல்லாவிட்டாலும், அவருடைய நுணுக்கமான ஆய்வுத்திறனை எதிலும் கவனித்துப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதை இந்த அறிமுகத்தை வாசிக்கிறவர்கள் உணருவார்கள். ஆங்கிலத்தில் உள்ள பெக்கரின் அறிமுகம் ஒரு சிறந்த வக்கீலின் வாதத்திறத்தோடு தத்துவார்த்தரீதியில் எழுதப்பட்டது. பெக்கரின் வாதங்களைப் புரிந்துகொள்ள அவரின் அறிமுக உரையை ஒருவர் மிகக்கவனத்தோடும், நிதானத்தோடும் வாசிப்பது அவசியம்.

தன் அறிமுக உரையின் ஆரம்பத்தில் பெக்கர் சொல்லுகிறார், 'ஓவனின் நூலை வாசிக்கும்போது, ஆ! மறுபடியும் "வரையறுக்கப்பட்ட மீட்பு" (Limited Atonement) ஆகிய போதனையைப் பெரிதுபடுத்துகிற நூல் இது; வேறு எதை இது செய்கிறது என்று சிலர் எதிர்ப்புக்குரல் எழுப்புவார்கள்' என்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற சீர்திருத்த இறையியலாளன் வரையறுக்கப்பட்ட மீட்பைத் தவிர வேறு எதிலும் அக்கறை காட்டுவதில்லை என்றும், நம்மையெல்லாம் கல்வினிசத்தைப் பின்பற்ற வைக்கின்ற வேலையைத்தான் ஓவன் செய்கிறார் என்ற கண்டனக்குரலையும் எழுப்புவார்கள் என்கிறார் பெக்கர். இந்தக் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லும்முன் பலருடைய மனதிலும் இருக்கும் கல்வினிசம் பற்றிக்

காணப்படும் தப்பான எண்ணங்களை முதலில் களைவது அவசியம் என்கிறார் பெக்கர். அதனால், பொதுவாக கல்வினிசத்தைப் பற்றியும், குறிப்பாக ஐம்போதனைகளைப் பற்றியதுமான வரலாற்று, இறையியல் விளக்கத்தை முதலில் தர ஆரம்பிக்கிறார் பெக்கர்.

இந்த ஆக்கத்தில் ஜிம் பெக்கரின் அறிமுக உரை முழுவதையும் விளக்குவது என்னுடைய நோக்கமல்ல. அவருடைய அறிமுக உரையில் கல்வினிசத்தைப் பற்றியும், அதற்கும் கல்வினிச ஐம்போதனைகளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டையும் அவர் விளக்கியிருப்பதை மட்டுமே தரவிரும்புகிறேன். இந்தப் பகுதியே பெக்கரின் அறிமுக உரைக்கு அடிப்படையாக அமைகிறது. பெக்கரைப் பொறுத்தவரையில் இதைப் புரிந்துகொள்ளாதவர்களால் ஓவனின் நூலையும் புரிந்துகொள்வது கடினம். பெக்கரைப் பொறுத்தவரையில் “வரையறுக்கப்பட்ட மீட்பு” ஆகிய போதனைக்கு எதிராகக் குரலெழுப்புகின்றவர்கள் இரட்சிப்பு பற்றிய வரலாற்றுக் கல்வினிசப் போதனை பற்றிய முழுமையான ஞானமில்லாததாலேயே அதைச் செய்கிறார்கள். வரலாற்றுக் கல்வினிசத்தின் இரட்சிப்புப் பற்றிய போதனையை ஐம்போதனையாகிய விதிமுறை முழுமையாக விளக்கத் தவறிவிடுகிறது என்பதே இந்த அறிமுக உரையில் பெக்கரின் வாதம். அதாவது, வரலாற்றுக் கல்வினிசத்தின் இரட்சிப்புப்பற்றிய போதனையைத் தெளிவற்றதாக்கிவிடுகிறது கல்வினிச ஐம்போதனைகளாகிய விதிமுறை என்கிறார் பெக்கர். அது எப்படி என்று கேட்கிறீர்களா? நிதானத்தோடு இந்த ஆக்கத்தில் நான் விளக்கப்போகும் பெக்கரின் வாதத்தை வாசியுங்கள்.

*1.* கல்வினிச ஐம்போதனைகள் என்பது, பெல்ஜிக் செமி–பெலேஜியன்கள் (the Remonstrance) என்ற பெயரில் அழைக்கப்பட்டவர்கள் எதிர்மறையாக முன்வைத்த ஐந்துபோதனைகளுக்கு கொடுக்கப்பட்ட பதில் மட்டுமே.

இது 17ம் நூற்றாண்டில் ஆரம்பத்தில் நிகழ்ந்தது. வரலாற்றில் ஆர்மீனியனிசம் என்று அறியப்பட்டிருக்கும் இந்த செமி–பெலேஜியனிசம் இரண்டு முக்கிய தத்துவங்களின் அடிப்படையில் உருவானது:

1. முதலாவது, தெய்வீக இறையாண்மையும் தனிமனித சுயாதீனமும் இணைந்து பயணிக்கமுடியாதவை, அதனால் இறையாண்மையும் மனிதனின் கடமையும் ஒன்றுக்கொண்று பொருந்திப்போக முடியாதவை.

2. இரண்டாவது, மனிதன் எதற்கும் பொறுப்பாளியாயிருப்பதை அவனுக்கிருக்கும் ஆற்றல் இடங்கொடுக்கவில்லை.

இந்த இரண்டின் அடிப்படையிலும் ஆர்மீனியன்கள் மேலும் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்கள்:

அ. ஒன்று, விசுவாசத்தை வேதம் சுயாதீனமான மானுடக் கடமையாகக் கணிப்பதால், அது கடவுளிடம் இருந்து உருவாக முடியாது; அது மனிதன் கடவுளின் பங்கில்லாமல் தானே சுயமாகச் செய்யும் ஒன்றாகும்.

ஆ. இரண்டாவது, சுவிசேஷத்தைக் கேட்கும் அனைவரினதும் கடமைப்பாடாக விசுவாசத்தை வேதம் கருதுவதால், விசுவாசிக்கக்கூடிய வல்லமை அனைவரிலும் பொதுவாகக் காணப்படுகிறது.

ஆகவே, இவற்றின் அடிப்படையில் ஆர்மீனியன்கள் பின்வரும் ஐந்து கோட்பாடுகளை முன்வைத்தார்கள்.

1. சுவிசேஷத்தைக் கேட்கும்போது இரட்சிப்புக்குரிய விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாதளவுக்கு மனிதன் ஒருபோதும் முழுமையாகப் பாவத்தினால் கறைபடிந்துபோகவில்லை.

2. சுவிசேஷத்தை மறுதலிக்க முடியாதபடி மனிதன் கடவுளால் ஒருபோதும் ஆதிக்கம் செலுத்தப்படவில்லை.

3. மனிதன் தன்னுடைய சுயாதீனமான சித்தத்தைப் பயன்படுத்தி கிறிஸ்துவை விசுவாசிப்பான் என்ற கடவுளின் முன்னோக்குப் பார்வையே இரட்சிக்கப்படுகிறவர்களுக்கான அவருடைய தெரிந்துகொள்ளுதலுக்குக் காரணமாக இருக்கிறது.

4. கிறிஸ்துவின் மரணம் எவருடைய இரட்சிப்பையும் நிறைவேற்றவில்லை; அது எவருக்கும் விசுவாசத்தை ஈவாகவும் சம்பாதிக்கவில்லை. (அத்தகைய ஒரு ஈவு இல்லை): கிறிஸ்துவை விசுவாசிக்க விரும்புகிறவர்கள் இரட்சிக்கப்படும்படியான ஒரு வாய்ப்பை மட்டுமே அது உருவாக்கியது.

5. கிருபையின் ஸ்தானத்தில் தொடர்ந்திருப்பதற்கு விசுவாசத்தைக் தக்கவைத்துக்கொள்ளுவது விசுவாசிகளின் கையிலேயே இருக்கிறது; அதைச் செய்யமுடியாதவர்கள் பின்வாங்கிப்போய் இரட்சிப்பை இழந்துபோவார்கள். இந்த முறையில் ஆர்மீனியனிசம், மனிதனுடைய இரட்சிப்பு அவனுடைய கையிலேயே தங்கியிருப்பதாக விளக்கியது. அத்தோடு, இரட்சிக்கும் விசுவாசம் ஆரம்பத்தில் இருந்தே மனிதனுடைய கிரியையாகவும், அவனுக்கே சொந்தமானதாகவும், கடவுளிடம் இருந்து அவனுக்குக் கிடைக்காததொன்றாகவும் அது விளக்கியது.

நெதர்லாந்தில் சினொட் ஆவ் டோர்ட் என்ற திருச்சபைத் தலைவர்களை உள்ளடக்கிய இறையியல் ஆய்வுக்குழு 1618ல் கூடி, ஆர்மீனியன்களின் ஐந்து போதனைகளுக்கும் எதிரான பதில்களாக கல்வினிச ஐம்போதனைகளை முன்வைத்தது. கல்வினிச ஐம்போதனைகள் மாறுபட்ட ஒரு தத்துவத்தில் இருந்து பிறந்தவையாக இருந்தன: அதாவது, வேதத்துவமான 'இரட்சிப்பு கர்த்தருடையது' என்பதில் இருந்து அவை உருவாகியிருந்தன. அவற்றை பின்வருமாறு சுருக்கலாம்:

1. பாவத்தில் வீழ்ந்திருக்கும் மனிதன் தன்னுடைய இயல்பான ஸ்தானத்தில், ஊக்கப்படுத்தும்படியான சகலவித புறச்சாதனங் களையும் அடைந்திருந்தபோதும், நியாயப்பிரமாணத்தை

விசுவாசிக்கக்கூடிய எந்த வல்லமையும் இல்லாதவனாக இருப்பதுபோல் சுவிசேஷத்தையும் விசுவாசிக்க முடியாத வல்லமையற்றவனாக இருக்கிறான்.

2. கடவுளின் தெரிந்துகொள்ளுதல் சுயாதீனமானதும், இறையாண்மையுள்ளதும், நிபந்தனையற்ற பாவிகளின் தெரிவாகவும் இருப்பதோடு, பாவிகளைப் பாவிகளாக மட்டும் கணித்து, விசுவாசத்தை ஈவாக அடைந்து கிறிஸ்துவால் மீட்கப்படவேண்டியவர்களாகவும், அவர்கள் மகிமையை அடைகிறவர்களாகவும் செய்யக்கூடியதாக இருக்கிறது.

3. தெரிந்துகொள்ளப்பட்டவர்களை இரட்சிப்பதே கிறிஸ்துவின் மீட்புப் பணியின் முடிவும், இலக்குமாக அமைந்திருக்கிறது.

4. மனிதர்கள் விசுவாசத்தை அடையும்படிச் செயல்படும் பரிசுத்த ஆவியானவர் தன் இலக்கை நிறைவேற்றுவதில் ஒருபோதும் தவறமாட்டார்.

5. எவரும் வெல்லமுடியாத கடவுளின் வல்லமை விசுவாசிகள் கிருபையிலும் விசுவாசத்திலும் நிலைத்திருந்து மகிமையை அடையும்படியாகச் செய்கிறது.

இந்த ஐம்போதனைகளும் சௌகரியமான விதத்தில் ‘டுலிப்’ என்ற ஆங்கில வார்த்தையின் (Tulip) மூலம் விளக்கப்படுகிறது: முழுமையான சீரழிவு, நிபந்தனையற்ற தெரிந்துகொள்ளுதல், வரையறுக்கப்பட்ட மீட்பும், நிராகரிக்கமுடியாத கிருபை, பரிசுத்தவான்களின் பாதுகாப்பு.

வேதபூர்வமான சுவிசேஷத்தை விளக்குகின்ற இந்த இரண்டு ஒத்திசைவான விளக்கங்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிர்மறைத் திசையில் நிற்கின்றன என்று கூறும் பெக்கர், இந்த இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு அவை வலியுறுத்தும் காரியங்களில் அல்லாமல் அவற்றின் உள்ளடக்கத்திலேயே தங்கியிருக்கின்றன என்கிறார். அதை மேலும் விளக்க எத்தனிக்கும் பெக்கர், இவற்றில் ஒன்று இரட்சிக்கும் கடவுளை விளக்குகிறது என்றும், அதற்கு எதிர்மறையானது மனிதன் தன்னை இரட்சித்துக்கொள்ள அவனுக்குத் துணைபோகும் கடவுளைப் பற்றியது என்கிறார். இவற்றில் ஒன்று பாவத்தில் வீழ்ந்திருக்கும் மனிதர்களை விடுவிக்க பரிசுத்த திரித்துவத்தின் மூன்று அங்கத்தவர்களும் செய்திருக்கும் மாபெரும் கிரியைகளை விளக்குகின்றது; பிதாவின் தெரிந்துகொள்ளுதலும், குமாரனின் மீட்புப்பணியும், பரிசுத்த ஆவியானவரின் அழைப்புமே அவை. இந்த மூன்று கிரியைகளும் குறிப்பிட்டோருக்கான இழந்துபோக முடியாத இரட்சிப்பை நிறைவேற்றவே செய்யப்பட்டன என்கிறார் பெக்கர். இரண்டாவது விளக்கம் இந்த மூன்று கிரியைகளுக்கும் முற்றிலும் மாறான விளக்கங்களைத் தருகிறது. அதாவது, இந்த மூன்றும் சகல மனிதகுலத்துக்குமாக செய்யப்பட்ட கிரியைகளாகவும், அவை எந்தவொரு மனிதனின் இரட்சிப்பையும் நிறைவேற்றவில்லை என்று அது விளக்குகிறது.

இந்த இரண்டு இறையியல் விளக்கங்களும் இரட்சிப்பின் திட்டத்தை முற்றிலும் வேறுபாடான நிலையில் இருந்து விளக்குகின்றன. ஒன்று, கடவுளின் கிரியையில் இரட்சிப்பு தங்கியிருப்பதாகவும், இதற்கு எதிரான விளக்கம் அதை மனிதன் இரட்சிப்புக்கு அளிக்கும் பங்கில் தங்கியிருப்பதாகவும் விளக்குகின்றன. முதலாவது, கடவுள் அளிக்கும் ஈவாகிய இரட்சிப்பின் ஒரு பங்காக விசுவாசத்தை விளக்கும்வேளை, அதற்கு முரணான விளக்கம், அதை மனிதன் இரட்சிப்புக்கு அளிக்கின்ற பங்காக விளக்குகின்றது. முதலாவது, விசுவாசிகளை இரட்சிக்கும் கடவுளுக்கு சகல மகிமையையும் அளிக்கின்றவேளை, இரண்டாவது, அதை இரட்சிப்பின் திட்டத்தை உருவாக்கிய கடவுளுக்கும், விசுவாசத்தின் மூலம் அதை இயங்கச் செய்யும் மனிதனுக்கும் இடையில் பங்கிடுகிறது. இரண்டு இறையியல் விளக்கங்களுக்குமிடையிலுள்ள இந்த வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளுவது மிகவும் அவசியமானது. கல்வினிசத்தின் சுருக்கவிளக்கமான ஐம்போதனைகளின் முக்கியத்துவமும் நிரந்தரப் பயனும், இந்த வேறுபாடுகளைத் தெளிவாகவும், எந்தளவுக்கு இந்த வேறுபாடுகள் ஒன்றிற்கொன்று முரணாக அமைந்திருக்கின்றன என்பதையும் விளக்குவதிலேயே தங்கியிருக்கின்றன என்கிறார் பெக்கர்.

இருந்தபோதும், ஐம்போதனைகளையே கல்வினிசமாகக் (முழுமையான சீர்திருத்த இறையியலாக) கருதுவது தவறானது என்கிறார் பெக்கர்.

ஐந்து காரணங்களின் மூலம் இதைப் பெக்கர் விளக்குகிறார்.

### 1. ஐம்போதனைகள் தரும் விளக்கத்தைவிட மிகவும் விரிவானது கல்வினிசம்.

பெக்கர் சொல்லுகிறார், 'கடவுளே இந்த உலகத்தைப் படைத்தவராக, இராஜாவாக இருக்கிறார் என்பதன் அடிப்படையில் கல்வினிசம் முழுமையானதொரு உலகப் பார்வையைக் கொண்டிருக்கிறது. தன்னுடைய சித்தத்தின் அடிப்படையில் அனைத்தையும் நிறைவேற்றிக்கொண்டிருக்கும் கடவுளே படைத்தவராக, ஆண்டவராக இருக்கிறார் என்பதை சீராக வலியுறுத்தி வருகிறது கல்வினிசம். கடவுளின் வார்த்தையின் வழியில், அதற்கு அடங்கி வாழ்க்கையின் அனைத்துப் பகுதியையும் கடவுளுடைய பார்வையின் அடிப்படையில் சிந்திப்பதே கல்வினிசமாகும். இன்னொருவிதத்தில் சொல்லப்போனால், வேதத்தின் அடிப்படையில் அனைத்தையும் ஆராயும் வேதஇறையியலே கல்வினிசமாகும் – இயற்கை, கிருபை ஆகிய இரண்டிலும் படைத்தவராகிய கடவுளே அனைத்திற்கும் காரணராகவும், அவற்றை அடையும் சாதனமாகவும், அவற்றின் முடிவாகவும் இருக்கிறார் என்ற கடவுளை மையமாகக் கொண்ட 'கடவுள் பார்வையே' கல்வினிசமாகும். கடவுளே அனைத்திற்கும் காரணகர்த்தா எனும் கடவுள் நம்பிக்கையையும், அனைத்தையும் கடவுளே அளிக்கிறார் என்று அவரில் தங்கி நிற்கும் மதநம்பிக்கையையும், அனைத்திற்கும் ஆண்டவராகிய கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்ற சுவிசேஷ நம்பிக்கையையும் கொண்ட பூரணமான, நுணுக்கத்தோடு உருவான இறையியல் கோட்பாடு கல்வினிசம். கல்வினிசம் ஓர் ஒருங்கிணைந்த உலக தத்துவம்; அது உலகத்தில்

*நிகழும் வெவ்வேறுவிதமான நடவடிக்கைகளையும், அவை வளர்ந்து வரும் விதத்தையும், கடவுள் தன்னுடைய திருச்சபைக்கும், உலகத்திற்கும் நித்தியத்தில் இருந்தே முன்குறித்து உருவாக்கியிருந்த திட்டத்தின் படிப்படியான நிறைவேற்றமாகக் கணிக்கிறது. கல்வினிச ஐம்போதனைகள், தனியொருவனை கடவுள் தன் இறையாண்மையால் இரட்சிக்கிறார் என்பதற்கு மேலாக எதையும் விளக்குவதில்லை; ஆனால், கல்வினிசமோ, இதைவிட விரிவான உண்மையை விளக்குகிறது – அதாவது கடவுள் அனைத்துக் காரியங்களிலும் இறையாண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதே அது.'*

***2. ஐம்போதனைகள், இரட்சிப்பு பற்றிய கல்வினிசப் போதனைகளை எதிர்மறையாகவும், தத்துவார்த்தரீதியிலும் விளக்குவதாக இருக்கின்றவேளை, கல்வினிசம் அடிப்படையில் வேதவியாக்கியானமாகவும், போதக இறையியலாகவும், ஆக்கபூர்வமானதாகவும் காணப்படுகிறது.***

இதுபற்றி விளக்கும் பெக்கர் சொல்கிறார், *'கல்வினிசத்தால் ஆர்மீனியனிசத்தை சுட்டிக்காட்டாமலேயே தன்னுடைய போதனைகளை வேதத்தில் இருந்து தெளிவாக விளக்கமுடியும். அது தொடர்ந்து தன்னை நிலைநிறுத்திக்கொள்ள மெய்யாகவோ அல்லது கற்பனையாகவோ காணப்படும் ஆர்மீனியனிசத்தோடு தொடர்ந்து போர் தொடுக்கவேண்டிய அவசியமில்லை. கல்வினிசத்திற்கு எந்தவிதமான எதிர்மறைகளிலும் அக்கறையில்லை. கல்வினிசம் போராடுகிறவேளை அது நேர்மறையான சுவிசேஷ சத்தியங்களை நிலைநிறுத்தவே போராடுகிறது. எதிர்மறையாக எழுதப்பட்டிருக்கும் 'ஐம்போதனைகள்' அதன் மூன்றாவது புள்ளியைப் பொறுத்தவரையில் (வரையறுக்கப்பட்ட மீட்பு) தவறானதொரு கருத்துக்கு இடங்கொடுத்துவிடுகிறது. இந்தப் புள்ளியில் நாம் அழுத்தி வாசிக்கும், மீட்பை எத்தகையது என்று விளக்கும் 'வரையறுக்கப்பட்ட'* (limited) *என்ற பெயரடைச்சொல், கல்வினிசத்தார் தெய்வீக கிருபையைக் கட்டுப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்று கருத இடங்கொடுத்துவிடுகிறது. உண்மையில் இந்த வார்த்தைப் பிரயோகம், சுவிசேஷம் அதிமுக்கியமாக அறிவிக்கும் 'மீட்பர் மெய்யாகவே மீட்கிறார்' என்ற சத்தியத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயே பயன்படுத்தப்படுகிறது. அதேபோல், தெரிந்துகொள்ளுதல் நிபந்தனையோடு கூடியது என்பதையும், கிருபையை நிராகரித்துவிட முடியும் என்பதையும் மறுக்கின்ற புள்ளிகள், கடவுள் மட்டுமே இரட்சிப்பை அளிக்கிறார் என்ற நேர்மறையான சத்தியத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படுகின்றன. உண்மையில் ஆர்மீனியன்களே தெரிந்துகொள்ளுதல், மீட்பு, அழைப்பு ஆகியவை கடவுளின் இரட்சிக்கும் கிரியைகள் என்பதை அடியோடு மறுக்கிறார்கள். கல்வினிசமோ, சுவிசேஷத்தின் நேர்மறையான உள்ளடக்கத்தை நிலைநிறுத்தவும், விசுவாசத்தையும், திருச்சபையையும் பெலப்படுத்தும் நேர்மறை நோக்கத்துடன் இந்த ஆர்மீனியனிச மறுதலிப்புகளை நிராகரிக்கின்றது.'*

***3. கல்வினிசத்தின் இரட்சிப்பு பற்றிய போதனையை ஐந்து வேறுபட்ட போதனைகளாகப் பிரித்து விளக்குவது, இரட்சிப்பு பற்றிய கல்வினிசப் போதனையின் இயற்கைத் தன்மையையும், அதன் விளக்கத்தையும் தெளிவற்றதாக்கிவிடுகின்றது. (இந்த ஐந்து போதனைகளை சினொட் ஆவ் டோர்ட் பதிலாக உருவாக்கியதற்குக் காரணம் ஆர்மீனியனிசத்தின் ஐந்து போதனைகளே).***

*இதை பெக்கர் விளக்குவதைக் கவனியுங்கள், 'கல்வினிச ஐம்புள்ளிகளும் வெவ்வேறாகக் காட்டப்பட்டிருந்தபோதும் அவை பிரிக்கமுடியாதபடி இணைந்திருப்பவை. அவை இணைந்தே இருப்பவை; அவற்றில் எதையாவது நிராகரிப்பது அனைத்தையும் நிராகரிப்பதில் முடியும். அந்தவிதத்திலேயே சினொட் ஆவ் டோர்ட் அவற்றை அமைத்திருந்தனர். இரட்சிப்பைப் பொறுத்தவரையில் கல்வினிசத்தை விளக்குவதானால் ஒரேயொரு உண்மையையே வலியுறுத்தமுடியும்: கடவுள் பாவிகளை இரட்சிக்கிறார் என்பதே அது. திரித்துவ ஆள்தத்துவங்களான பிதா, குமாரன், ஆவியானவர் ஆகிய மூவரும் இறையாண்மையுள்ள ஞானம், வல்லமை மற்றும் அன்போடு ஒருங்கிணைந்து செயல்பட்டு தெரிந்துகொள்ளப்பட்ட மக்களுக்காக இரட்சிப்பை நிறைவேற்றினார்கள். பிதா தெரிந்துகொள்வதன் மூலமும், குமாரன் பிதாவின் சித்தத்தைப் பின்பற்றி மீட்பை நிறைவேற்றியும், பிதாவினதும், குமாரனுடையதும் நோக்கங்களின்படி மறுரூபமாக்குவதை ஆவியானவர் செயல்படுத்துவதன் மூலமும் கடவுளின் மக்களுக்கான இரட்சிப்பு அவர்களைச் சேர்ந்தடைகிறது. கடவுளின் இரட்சிக்கும் கிருபை, ஆரம்பத்தில் இருந்து கடைசிவரை அனைத்தையும் நிறைவேற்றுகிறதாகக் காணப்படுகிறது – பாவத்தில் மரித்திருக்கும் மனிதனை விடுவித்து மகிமையில் ஜீவனை அடையும்வரையிலான அனைத்தும் அதில் உள்ளடங்கியிருக்கிறது: இரட்சிப்பின் திட்டமிடல், மீட்பை நிறைவேற்றி உரியவர்களுக்கு அதைக் கொண்டு சேர்ப்பது, அவர்களை அழைத்துப் பாதுகாப்பது, நீதிமானாக்குதல், பரிசுத்தமாக்குதல், மகிமையை அடையச் செய்தல் ஆகிய அனைத்தும் இரட்சிப்பில் அடங்கியிருக்கின்றன.'*

*பெக்கர் தொடர்ந்து, 'கடவுள் மனிதர்களைப் பாவிகளாக, குற்றவாளிகளாக, கேடானவர்களாக, தன்னில் பலமற்றவர்களாக, ஆவியில் குருடர்களாக, கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்ற இயலாதவர்களாக, தன்னுடைய ஆவிக்குரிய நிலையை எந்தவிதத்திலும் திருத்திக்கொள்ள இயலாதவர்களாகக் காண்கிறார். கடவுள் பாவிகளை இரட்சிக்கிறார் – இந்த உண்மையின் சாரத்தை நாம் எந்தவிதத்திலும் பலவீனமாக்கக்கூடாது. இரட்சிப்பில் திரித்துவ தேவனின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் ஒற்றுமையைக் குலைத்தோ அல்லது இரட்சிப்பின் செயல்முறையை கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் பங்கிட்டு அதில் மனிதனுக்கு முதன்மையான இடத்தை அளித்தோ அல்லது மனிதனின் இயலாமையை திரித்துக்காட்டி இரட்சிப்பின் மகிமையை அவன் கடவுளோடு பங்கிடும்விதத்தில் விளக்கவோகூடாது. பாவிகள் எந்தவிதத்திலும் தங்களை இரட்சித்துக்கொள்ளுவதில்லை; ஆரம்பம் முதல் இறுதிவரை இரட்சிப்பு, முழுமையாக, எக்காலத்திலும் கடவுளுடையது; அவருக்கே சகல மகிமையும் சேர வேண்டும். ஆமென்!*

இந்த உண்மையைத்தான் கல்வினிசத்தின் இரட்சிப்புப் பற்றிய போதனைகள் ஐம்போதனைகளின் மூலம் வலியுறுத்துகின்றன; ஆர்மீனியனிசத்தின் அத்தனைப் போதனைகளும் இதை நிராகரிக்கின்றன' என்று ஆணித்தரமாக விளக்குகிறார் பெக்கர்.

**4. ஐம்போதனைகளாகிய விதிமுறை (கோட்பாடு), கல்வினிசத்திற்கும், ஆர்மீனியனிசத்திற்கும் இடையில் காணப்படும் ஆழமான இடைவெளியைத் தெளிவற்றதாக்கிவிடுகிறது.**

ஐம்போதனைகள் அநேகரை இந்த விஷயத்தில் குழப்பமடையச் செய்துவிடுகிறது. இந்த ஐம்போதனைகளில் ஒவ்வொன்றையும் கவனித்தீர்களானால், அழுத்தம் அவற்றின் பெயரடைகளில் (adjectives) பதிந்துவிடுவதால் அது தவறான எண்ணத்தை உருவாக்கிவிடுகிறது. அதாவது, கடவுளின் மூன்று இரட்சிக்கும் கிரியைகளைப் பொறுத்தவரையில் அவற்றைப் பற்றிய விவாதம் ஐம்போதனைகளின் பெயரைடைகளைப் பற்றியதே என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. உதாரணத்திற்கு, இரண்டு தரப்பாருமே தெரிந்துகொள்ளுதல், மீட்பு, கிருபையாகிய ஈவு ஆகிய மூன்றைக் குறித்தும் ஒத்த கருத்தைக் கொண்டிருந்தபோதும், தங்களுக்குக்கிடையில் காணப்படும் வேறுபாடு அம்மூன்றின் பெயரடைகளைக் குறித்தது மட்டுமே என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. இன்னும் விளக்கமாக சொல்லப்போனால், முதலாவதான தெரிந்துகொள்ளுதல், ஒருவர் விசுவாசிப்பார் என்ற முன்னறிவின் அடிப்படையிலானதா? இல்லாவிட்டால் அத்தகைய முன்னறிவின் அடிப்படையில் அமையாததா? என்ற கேள்வியை எழுப்புகிறது. அதேபோல், இரண்டாவதான மீட்பு எல்லோருக்கும் இரட்சிப்பை அளிக்கிறதா, இல்லையா? என்பதைக் குறித்தது என்றும், மூன்றாவதான கிருபை நிராகரிக்கப்படக்கூடியதா, இல்லையா? என்பதைக் குறித்தது என்ற தோற்றத்தையும் கொடுத்துவிடுகிறது. இது ஐம்போதனைகள் பற்றிய முற்றிலும் தவறான எண்ணம். ஐம்போதனைகள் ஒவ்வொன்றின் பெயரடையில் ஏற்படுகின்ற மாற்றம் அவற்றின் பெயர்ச்சொல்லிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆர்மீனியனிசம் விளக்கும் நிபந்தனையுள்ள தெரிந்துகொள்ளுதலும், எல்லோருக்குமான மீட்பும், நிராகரித்துவிடக்கூடிய உள்ளார்ந்த கிருபையும், கல்வினிசம் போதிக்கும் தெரிந்துகொள்ளுதலும், மீட்பும், கிருபையும் அல்ல. ஐம்போதனைகளின் முக்கியத்துவம் அதன் பெயரடைகளில் தங்கியிராமல் அதன் பெயர்ச்சொற்களுக்கான விளக்கத்திலேயே தங்கியிருக்கின்றது. (உதா: வரையறுக்கப்பட்ட மீட்பு என்பதில் அதற்கான விளக்கம் 'வரையறுக்கப்பட்ட' என்ற அதன் பெயரடையில் தங்கியிராமல் அதோடு இணைந்து வரும் பெயர்ச்சொல்லான மீட்பு என்பதிலேயே தங்கியிருக்கிறது). முதன் முதலாக கல்வினிசம் பற்றிய முரண்பாடு தோன்றியபோதே இரு தரப்பினரும் இதை உணர்ந்திருந்தனர்; அதை நாமும் உணர்வது அவசியம். இல்லாவிட்டால் இந்த கல்வினிசம்–ஆர்மீனியனிசம் பற்றிய விவாதத்தில் எந்தப் பிரயோஜனமும் இல்லாமல் போய்விடும். அதனால், இரண்டு பகுதியாருக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைத் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பது அவசியம் என்கிறார் பெக்கர்.

*1. கடவுளின் தெரிந்துகொள்ளுதலாகிய கிரியையை ஆர்மீனியன்கள், குறிப்பிட்ட விசேஷமான மனிதர்களைக் கடவுள் தன் பிள்ளைகளாக்குவதற்கும், அவர்கள் மகிமையடைவதற்குமான தீர்மானமாக விளக்குகிறது. இதைத் தனி நபர்கள் தாங்களாகவே கிறிஸ்துவை விசுவாசிப்பார்கள் என்று முன்கூட்டியே அறிந்திருக்கும் முன்னறிவின் அடிப்படையில் கடவுள் தீர்மானித்திருக்கிறார் என்பது ஆர்மீனியனிசத்தின் விளக்கம். இதன்படி, தெரிந்துகொள்ளுதலாகிய கடவுளின் ஆணையில் எவருமே உள்ளடங்கிக் காணப்படவில்லை; எந்த மனிதனையும் விசுவாசிக்கச் செய்யும் உறுதியான தீர்மானத்தைக் கடவுள் கொண்டிருக்கவில்லை என்பதே ஆர்மீனியனிசத்தின் வாதம். ஆனால் கல்வினிசமோ, எந்தவிதத் தகுதியுமில்லாத குறிப்பிட்ட நபர்களை அவர்களுடைய பாவத்தில் இருந்து இரட்சித்து மகிமையை அடையச்செய்யும் கிருபையாக தெரிந்துகொள்ளுதலை விளக்குகிறது. இதற்காக அவர்கள் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் மீட்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் திட்ப உறுதியான அழைப்பின் மூலம் விசுவாசத்தையும் அடையும்படிச் செய்யப்படுகிறார்கள். 'என்னுடைய தெரிந்துகொள்ளுதலுக்கு நான் என் விசுவாசத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்று ஆர்மீனியன் சொல்கின்றவேளை, கல்வினிச விசுவாசி, 'என் விசுவாசத்திற்கு நான் என் தெரிந்துகொள்ளுதலுக்கே கடமைப்பட்டிருக்கிறேன்' என்று கூறுவான். இந்த இரண்டு கோட்பாடுகளும் தெளிவாகவே ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள பேரிடைவெளி கொண்டவை.*

*2. கிறிஸ்துவின் மீட்பின் கிரியையை ஆர்மீனியன்கள், சுவிசேஷத்தை கேட்டவர்களுக்கும், அதைக் கேட்டிராவிட்டாலும் தங்களுக்குக் கிடைத்த வெளிச்சத்தின்படி வாழ்ந்திருப்பவர்களுக்கும் கடவுள் அளிக்கும் மன்னிப்புக்குக் குறுக்கீடாக இருந்த தடையை அகற்றும் கிரியையாக மட்டும் விளக்கினார்கள். அந்தத் தடை அத்தகையோரின் விசுவாசித்தால் மட்டுமே நீக்கப்படுகிறதாகவும் அவர்கள் விளக்கினார்கள். கிறிஸ்துவின் மீட்பு, அத்தகைய மன்னிப்பை அளிக்கக்கூடிய உரிமையைக் கடவுளுக்குத் தந்ததே தவிர, அவர்களில் எவராவது அந்த மன்னிப்பை எப்போதாவது ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற நிச்சயத்தை உறுதிப்படுத்தவில்லை என்பது இவர்களுடைய விளக்கம். ஆர்மீனியன்களின் விளக்கத்தின்படி, விசுவாசம் மனிதனுடைய சொந்தக் கிரியை மட்டுமே; அது கடவுளிடம் இருந்து வருகின்ற ஈவாக அவர்கள் கருதவில்லை. கிறிஸ்துவின் மரணம், பாவிகள் விசுவாசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை மட்டும் ஏற்படுத்தித் தந்ததே தவிர வேறெதையும் செய்யவில்லை என்கிறது ஆர்மீனியனிசம்.*

*ஆனால் கல்வினிசமோ, மீட்பை வேறுவிதமாக விளக்குகிறது: குறிப்பிட்ட மக்களுக்காக கிறிஸ்து அவர்களுடைய இடத்தில் இருந்து பாவத்திற்கான தண்டனையை அனுபவித்த கிரியையாக அவர்கள் மீட்பிற்கு விளக்கமளிக்கிறார்கள். அத்தோடு மீட்பின் மூலம், கடவுள் அம்மக்களோடு ஒப்புரவாக்கப்பட்டு, அவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்த தண்டனை முற்றாக நீக்கப்பட்டு, நித்தியஜீவனுக்கான உறுதிப்பத்திரமும் நிச்சயப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, கடவுளின் முன் அவர்கள், தங்களுடைய ஆத்மீக சொத்துக்களை அனுபவிப்பதற்கான சாதனமாகிய விசுவாசத்தை ஈவாக*

*அடையக்கூடிய உரிமையைப் பெறுகிறார்கள். கிறிஸ்து மரித்தவர்களுக்கான இரட்சிப்பை அவர்கள் அடைவதற்கான வெறும் வசதியை கல்வாரி ஏற்படுத்தவில்லை; அது அவர்கள் விசுவாசத்தையும், இரட்சிப்பையும் அடைவதை நிறைவேற்றி உறுதிப்படுத்தியது. சிலுவை இரட்சிக்கிறது என்கிறார் பெக்கர். 'கல்வாரி இல்லாமல் நான் என்னுடைய இரட்சிப்பை அடைந்திருக்கமுடியாது' என்று ஆர்மீனியன் சொல்லுகின்றவேளை, 'என் இரட்சிப்பை எனக்காக கிறிஸ்து கல்வாரியில் பெற்றார்' என்பான் கல்வினிச விசுவாசி. ஆர்மீனியனிசம், கல்வாரியை இரட்சிப்புக்கு மிக அவசியமானதாக மட்டும் கருதுகிறபோது, கல்வினிசம், அதுவே இரட்சிப்பு நிறைவேறுவதற்குக் காரணகர்த்தா என்கிறது. அத்தோடு, கடவுளுக்கும் அவருடைய குமாரனுக்கும் இடையில் இடம்பெற்ற மீட்பின் திட்டமிடலே கல்வாரியில் நிறைவேறியதாகவும், விசுவாசம் உட்பட இரட்சிப்பின் சகல ஆசீர்வாதங்களுக்கும் அத்திட்டமிடலே ஆதாரமானதாகவும் காண்கிறது. மீட்பைப் குறித்த இந்த இரண்டு விளக்கங்களும் ஒன்றுக்கொன்டு முற்றிலும் முரண்பாடானவை.*

*3. பரிசுத்த ஆவியானவரின் கிரியையான உள்ளார்ந்த கிருபையை ஆர்மீனியன்கள் ஒருவகை 'ஒழுக்க உந்துதலாக' மட்டுமே கணிக்கிறார்கள். அதாவது, கடவுளின் சத்தியத்தை அறிந்துகொள்ளும் அறிவை மட்டுமே ஆவியானவர் ஒருவருக்கு அளிப்பதாக விளக்குகிறார்கள். இதை அவர்கள் வலியுறுத்துகிறபோதும், அவர்களைப் பொறுத்தவரையில் எவரும் எந்த சூழ்நிலையிலும் விசுவாசிப்பதற்கு இது துணைபோவதில்லை. ஆனால், கல்வினிசம் இந்த ஆவியானவரின் ஈவை வெறும் அறிவொளியாக மட்டும் கணிப்பதில்லை; மாறாக, கடவுள் மனிதனின் நிகழ்த்தும் மறுபிறப்பாக விளக்குகிறார்கள்; அவர், அவர்களுடைய கல்லான இருதயத்தை அகற்றிவிட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அளித்து, அவர்களுடைய சித்தத்தை புதுப்பித்து, தம்முடைய வல்லமையால் நல்லதை நாடும்படிச் செய்து, திட்ப உறுதியாய் அவர்கள் கிறிஸ்துவிடம் வரும்படிச் செய்கிறார்; இருந்தும் அவர்கள் கடவுளுடைய கிருபையின் கிரியையினால் சித்தங்கொண்டு சுதந்திரமாக கிறிஸ்துவிடம் வருகிறார்கள். இந்தக் கிருபை தடுத்து வெல்லமுடியாததாக (Irresistible) இருப்பதற்குக் காரணம், அப்படித் தடுக்கின்ற மனநிலையை அது ஒருவனில் அழித்துவிடுகிறது. ஆகவே, ஆர்மினியன், 'நான் கிறிஸ்துவுக்காக தீர்மானம் எடுத்தேன்' என்றும், 'நான் கிறிஸ்தவனாக வருவதற்கு சித்தங்கொண்டேன்' என்றும் மனநிறைவோடு சொல்லுகிறவேளை, ஒரு கல்வினிஸ்ட் தன்னுடைய மனமாற்றத்தை இறையியல் ரீதியில், அத்தகைய மாற்றத்திற்கு யார் காரணம் என்பதை விளக்க விரும்புவான்.*

*சிறைப்பட்ட என் ஆவி நெடுங்காலம்*
*பாவத்தால் கட்டப்பட்டு இயற்கையில் இருண்டிருந்தது*
*உமது கண்களின் சுடரொளி வேகமாய்ப் பரவியது*
*பாதாளத்தில் நெருப்பொளி வீசியது; நான் விழித்தெழுந்தேன்*
*என் தளைகள் அறுந்தன, என் இருதயம் விடுதலையடைந்தது*
*நான் எழுந்தேன், நடந்தேன், உம் பின்னால் சென்றேன்.*

சார்ள்ஸ் வெஸ்லியின் பாடலின் இவ்வார்த்தைகள் கல்வினிச விசுவாசியின் மனமாற்றத்தை விளக்குகின்றன. உள்ளார்ந்த கிருபையை விளக்கும் ஆர்மீனியனிச, கல்வினிச விளக்கங்கள் ஆணித்தரமாக எதிரும் புதிருமானவை.

ஆர்மீனியன்களின் விளக்கமான, கடவுளின் கிரியைகளான தெரிந்துகொள்ளுதலும், மீட்பும், அழைப்பும் இரட்சிப்பை ஒருவருக்கும் வழங்குவதில்லை என்பது அவற்றின் வேதபூர்வமான விளக்கங்களை அழிப்பதில் முடிகிறது என்கிறார்கள் கல்வினிசப் போதனையாளர். அதாவது, ஆர்மீனியன்கள் கூறுவதுபோல், கடவுள் விசுவாசிக்கிறவர்களைத் தெரிந்துகொள்கிறார் என்பதும், கிறிஸ்து சகல மனிதர்களுக்குமாக மரித்தார் என்பதும், வார்த்தையை ஏற்றுக்கொள்கிறவர்களை ஆவியானவர் உயிர்ப்பிக்கிறார் என்பதும், உண்மையில் வேதபோதனையின்படி பார்க்கிறபோது கடவுள் ஒருவரையுமே தெரிந்துகொள்ளவில்லை என்றும், கிறிஸ்து எவருக்குமாகவே மரிக்கவில்லை என்றும், ஆவியானவர் ஒருவரையுமே உயிர்ப்பிக்கவில்லை என்றும் சொல்வதில் போய் முடியும். இந்த இறையியல் விவாதத்தில் முக்கியமானது எதுவெனில், இதில் நாம் பயன்படுத்தும் வேதவார்த்தைப் பிரயோகங்களுக்கு நாம் கொடுக்கவேண்டிய அர்த்தமே. அத்தோடு, இரட்சிப்பு பற்றிய போதனையில் அவசியமானதாகக் காணப்படும் ஏனைய வார்த்தைப் பிரயோகங்களான தேவனின் அன்பு, கிருபையின் உடன்படிக்கை, இரட்சிப்பு எனும் வினைச்சொல் மற்றும் அதற்கிணையாகப் பயன்படுத்தப்படும் ஏனைய வார்த்தைகளுக்கும் நாம் கொடுக்கின்ற அர்த்தம் மிகமுக்கியமானது.

ஆர்மீனியன்கள், இரட்சிப்பு கடவுளின் எந்த ஆணையிலோ அல்லது கிரியைகளிலோ தங்கியிராமல் தனி மனிதனின் சுயாதீனமான கிரியையாகிய விசுவாசத்திலேயே தங்கியிருக்கிறது என்ற தத்துவத்தின்படி இந்த வார்த்தைப்பிரயோகங்களுக்கான உண்மையான அர்த்தங்களுக்கு மேற்பூச்சுப் பூசிமெழுகிவிடுகிறார்கள். ஆர்மீனியன்களின் தத்துவம் வேதபூர்வமானதில்லை என்றும், இப்படியாக வார்த்தைப் பிரயோகங்களுக்கு மேற்பூச்சுப் பூசிமெழுகுவது வேதத்தின் அர்த்தத்தை மாசுபடுத்தி, சுவிசேஷத்தின் அத்தனைப் பயன்பாடுகளையும் பாதித்துவிடுகிறது என்கிறார்கள் கல்வினிசப் போதனையாளர். இது மட்டுமே ஆர்மீனியன்களைப் பற்றிய விவாதமாக இருக்கின்றது.

***5.* ஐம்போதனைகளின் குறைபாட்டை விளக்கும் அடுத்த காரணி – அதன் அமைப்பு, அது ஆர்மீனியனிசத்தின் உருமாற்றமே என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. அதாவது, இயற்கையில் ஆர்மீனியனிசமே ஒரு முக்கிய போதனையாக இருந்தது என்றும், அதிலிருந்து உருவான கிளை விதிமுறையே கல்வினிசம் என்ற எண்ணத்தை அது உருவாக்குகிறது.**

இத்தகைய கருத்து தவறானது என்பதை நாம் வரலாற்றின் அடிப்படையில் விளக்கினாலும், இதுவே இவை இரண்டுக்குமிடையிலான உறவைப் பற்றிய உண்மை என்ற சந்தேகம் அநேகருடைய மனதில்

காணப்படுகின்றது. ஆர்மீனியனிசமே வேதத்தை நாம் படிக்கின்றபோது இயற்கையாக, தெளிவாகக் கவனிக்கின்ற, பாரபட்சமற்ற உண்மை என்றும், மாறாக கல்வினிசம், குறிப்பிட்ட வசனங்களை அவற்றின் மெய்யான கருத்தை மறைத்துப் பயன்படுத்தி ஒழுங்குபடுத்தி உருவான செயற்கையான போதனை என்றும் பரவலாகக் கருதப்பட்டு வருகிறது.

தனி நபர்களான கல்வினிஸ்டுகளைப் பற்றி நாம் எதைச்சொன்னபோதும், பொதுவாக கல்வினிசத்தைப்பற்றி இந்தவகையிலேயே கருதப்பட்டு வருகிறது. ஒருவிதத்தில் ஆர்மீனிசனிசம் இயற்கையானதுதான். எப்படியென்றால், பாவத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் மனிதனின் மனதில் உருவானதொரு போதனையை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது; இரட்சிப்புப் பற்றிய போதனையில்கூட தன்னுடைய முடிவுக்குத் தானே தலைவனென்றும், தன் ஆத்துமாவுக்குத் தானே வழிகாட்டியென்றும் மனிதன் நினைக்கின்ற மாயையை அதனால் ஒதுக்கிவிட முடியாதிருக்கிறது. இத்தகைய தவறான போக்கு முன்பு சபை வரலாற்றில் பெலேஜியனிசத்திலும் பின்பு சபைப் பிதாக்களின் காலத்தில் செமி–பெலேஜியனிசத்திலும், அதன்பின் இருண்டகாலப்பகுதியிலும் காணப்பட்டு, 17ம் நூற்றாண்டில் மீண்டும் தலைதூக்கி கத்தோலிக்க இறையியலிலும், புரொட்டஸ்தாந்தியர்களின் மத்தியிலும், தாராளவாதக் கோட்பாட்டாளர்களிடமும், நவீன சுவிசேஷ இயக்கத்தார் மத்தியிலும் இருந்து வருகின்றது; இது நம்மத்தியில் தொடர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாவத்தால் மனித மனம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்வரை ஆர்மீனியனிசமே அதில் இயற்கையாகக் காணப்படும் தவறான போதனையாக இருக்கும். அது வேறுவிதங்களில் இயற்கையானதாக இருக்க முடியாது. உண்மையில் கல்வினிசமே வேதத்தை அது காணப்படும் இயற்கை நிலையில், அதனுடைய மெய்யான அர்த்தத்தில் புரிந்துகொள்ளுகிறது; கல்வினிசம் வேதம் தெளிவாக விளக்குவதைப் பின்பற்றுகிறது. கடவுளே இரட்சிக்கிறார் என்ற வேதத்தின் தெளிவான போதனையை, அதுவும் தான் இரட்சிப்பதற்காகத் தெரிந்துகொண்டிருக்கிறவர்களையே இரட்சிக்கிறார் என்றும், அவர்களை எந்தவிதக் கிரியைகளின் அடிப்படையிலும் அல்லாமல் கிருபையின் மூலம் மட்டுமே இரட்சிக்கிறார் என்றும், அதனால் எந்த மனிதனும் தன்னுடைய இரட்சிப்புக்காக மார்தட்டிக்கொள்ள முடியாதென்றும், கிறிஸ்து அவர்களுக்கு பூரண இரட்சகராக கொடுக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர்களுடைய இரட்சிப்பு முழுமையாக சிலுவையில் இருந்தே புறப்படுகிறதென்றும், அவர்களை மீட்கின்ற பணி சிலுவையிலேயே முடிவுற்றது என்றும் கல்வினிசம் வலியுறுத்துகிறது. கல்வினிசமே சிலுவைக்கு அளிக்கவேண்டிய முறையான மரியாதையை அளிக்கிறது.

கல்வினிஸ்டு பாடும்போது, ‘தூரத்தில் பச்சைநிறத்திலொரு மலை நிற்கிறது, நகரத்து சுவரதில் இல்லை, அங்கேயே நம் ஆண்டவர் சிலுவை மரணத்தை சந்தித்தார். நம்மனைவரையும் இரட்சிக்க மரித்தார்; நம் பாவமன்னிப்புக்காக மரித்தார், நம்மை நலமாக்க மரித்தார்; அவருடைய

பரிசுத்த இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டு நாம் பரலோகத்துக்குப் போக மரித்தார்' என்றே பாடுகிறான். அதை அவன் உணர்ந்தே பாடுகிறான்.

தன் குமாரனின் மரணத்தின் மூலமாக மனிதர்களை இரட்சிக்கும் கடவுளின் நோக்கத்தின் நிறைவேறுதல், மனிதன் அதை விரும்பி விசுவாசிப்பதிலேயே தங்கியிருக்கிறதென்றும், கடவுளால் செய்யமுடிந்ததெல்லாம் எவருக்குமே இரட்சிப்பளிக்காத மரணத்தை கிறிஸ்து மரிக்கச் செய்தது மட்டுமே என்ற வெறும் அறிவுசார்ந்த விருப்பமாக கல்வினிச விசுவாசி வேத உண்மைகளைப் பூசிமெழுக மாட்டான். கிறிஸ்துவின் இயலாமையை அல்ல, அவருடைய இரட்சிக்கும் வல்லமையையே சிலுவை வெளிப்படுத்துகிறதென்று அவன் வலியுறுத்துகிறான். கற்பனையில் உருவான மனிதர்களுக்காக கற்பனையானதொரு இரட்சிப்பை கிறிஸ்து உருவாக்கவில்லை என்பதை அவன் நம்புகிறான். அதாவது, எவராவது விசுவாசிக்கக்கூடும் என்ற சாத்தியத்தியக்கூற்றின்படி சாத்தியமாகக்கூடிய இரட்சிப்பை கிறிஸ்து நிறைவேற்றாமல், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான மெய்யான, நிலையான இரட்சிப்பை அவர் நிறைவேற்றினார் என்பதை அவன் வலியுறுத்துகிறான். அவருடைய பரிசுத்தமான இரத்தம் நம்மெல்லோரையும் இரட்சிக்கின்றது; சிலுவை அது ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கேற்ப அமைந்திருந்ததால், கிறிஸ்து தன்னை ஒப்புக்கொடுத்த நோக்கத்தின் பலன்கள் அதைத் தொடருகின்றன. விசுவாசம் அதோடு இணைக்கப்பட்டிருப்பதால் சிலுவையின் இரட்சிக்கும் வல்லமை விசுவாசத்தில் தங்கியிருக்கவில்லை; சிலுவையின் இரட்சிக்கும் வல்லமையின் காரணமாகவே விசுவாசம் அதைத் தொடருகிறதாயிருக்கிறது. எவர்களுக்காக கிறிஸ்து மரித்தாரோ அவர்களெல்லோருக்குமான முழுமையான இரட்சிப்பை சிலுவை சம்பாதித்திருக்கிறது.

> 'நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக' (கலாத்தியர் 6:14).

இப்போது, இரட்சிப்பு பற்றிய கல்வினிசப் போதனை தெளிவாகிறது. அது செயற்கையானதல்ல; அதீத தத்துவரீதியான வாதத்தின் பலனுமல்ல. அதன் தலையாய போதனை, கடவுள் பாவிகளை இரட்சிக்கிறார், கிறிஸ்து நம்மை தன்னுடைய இரத்தத்தினால் மீட்கிறார் என்பதே. அதுவே வேதத்தினதும், விசுவாசிக்கும் நம் இருதயத்தினதும் சாட்சியாக இருக்கிறது. ஜெபிக்கிற போது தன்னுடைய இருதயத்தில் கடவுளுக்கு முன் எதை விசுவாசிக்கிறானோ அதையே கல்வினிச விசுவாசி மனிதர்களுக்கு முன் தன்னுடைய இறையியலாக அறிக்கையிடுகிறான். தன்னுடைய இருதயத்தில் கடவுளை ஆராதனை செய்வதற்கான உந்துதல் எழும்போது அதற்கு அவன் இணங்குகிறபோது, சகல கிறிஸ்தவர்களும் ஆத்துமாக்களின் விடுதலைக்காக ஜெபிக்கிறபோது செய்வதுபோல் கடவுளின் இறையாண்மையைக் குறித்தே அவன் எப்போதும் சிந்திக்கிறவனாகவும், பேசுகிறவனாகவும் இருக்கிறான். இதன் மூலம் அவன் தன்னைத் தாழ்த்தி தன் இரட்சிப்பிற்கான எதையும் தன்னுடையதாகக் கருதாமல் தனது இரட்சகருக்கே சகல மகிமையையும் செலுத்துகிறான்.

*கிறிஸ்துவில் புதிய மனிதனாக இருக்கிறவனின் இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிற இயற்கையான இறையியலே கல்வினிசம்; ஆர்மீனியனிசமோ அறிவுசார்ந்த பாவத்தின் பலவீனம். மறுபிறப்படையாதவர்களெல்லோரிலும் பாவம் எப்படி இயற்கையானதாக இருக்கிறதோ அதேபோல்தான் ஆர்மீனியனிசமும் இயற்கையானது. அறிவு சார்ந்த நிலையில் கிறிஸ்தவன் தன்நிலை உணர்ந்தவனாக இருப்பதன் அறிகுறிதான் கல்வினிச சிந்தனைப்போக்கு; கிறிஸ்தவன் தன் மாம்சத்தின் பலவீனத்தால் தன்நிலை உணராதிருப்பதன் அடையாளமே ஆர்மீனியனிச சிந்தனைப் போக்கு. வேதம் போதிக்கின்றவைகளுக்கெதிரான வாக்குவாதத்தில் அகப்பட்டு தன் கவனம் சிதறாதிருந்த வேளையிலும், போலியான பாரம்பரியங்களைப் பின்பற்றாதிருந்த வேளையிலும், கிறிஸ்தவ திருச்சபை கல்வினிசத்தையே பின்பற்றிப் போதித்தும் வந்திருந்தது. அதுவே ஐம்போதனைகளைக் குறித்த சபைப்பிதாக்களின் சாட்சியின் முக்கியத்துவமாக இருந்திருக்கிறது. அத்தகைய எத்தனையோ சாட்சிகளை முன்வைக்கமுடியும். ஆகவே, உண்மையில் இரட்சிப்பு பற்றிய இந்த இறையியல் போதனையை 'கல்வினிசம்' என்று அழைப்பது தவறான பாதைக்கு வழிகாட்டிவிடுகிறது; அது ஜோன் கல்வினுக்கும், சினொட் ஆவ் டோர்ட் இறையியலறிஞர்களுக்கும் மட்டும் சொந்தமாயிருந்த போதனையல்ல. இது கடவுளின் வெளிப்படுத்தலாகிய வேதம் போதிக்கின்ற, அதில் காணப்படுகின்ற போதனையும், கிறிஸ்தவ சமுதாயம் விசுவாசிக்கின்ற சத்தியமுமாகும். வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக இந்தப் போதனை 'கல்வினிசம்' என்ற தவறான புனைப்பெயரின் மூலம் அறியப்பட்டு அநேகரின் எதிர்ப்பைச் சந்தித்திருக்கின்றது. ஆனால், இது வேதபூர்வமான சுவிசேஷம் மட்டுமே.*

ஜே. ஐ. பெக்கரின் இந்த ஆக்கத்தை பாப்திஸ்து பிரசங்கியான சார்ள்ஸ் ஸ்பர்ஜன் அவர்களின் வார்த்தையைக் குறிப்பிட்டு முடிக்க விரும்புகிறேன்.

> *"கல்வினிசம் என்ற வார்த்தையின் மூலம் பொதுவாக தற்காலத்தில் அறியப்பட்டிருக்கும் சத்தியத்தைப் பிரசங்கித்தால் தவிர, சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் என்று சொல்ல முடியாது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. கல்வினிசம் என்பது அதற்குக் கொடுக்கப்பட்ட புனைப்பெயர்; கல்வினிசமே சுவிசேஷம், அதுவேறெதுவுமில்லை. இறையாண்மையின் மூலம் வருகின்ற கிருபையையும்; தெரிந்துகொள்ளும், மாறாத, நித்திய, வெற்றியடையும் யெகோவாவின் அன்பையும் பிரசங்கிக்காவிட்டால் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம் என்று நான் நம்பவில்லை. அதுமட்டுமல்லாமல், தன்னால் முன்குறித்து தெரிந்துகொள்ளப்பட்ட குறிப்பிட்ட மக்களை மீட்பதற்காக கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்ற சுவிசேஷ சத்தியத்தின் அடிப்படையில் பிரசங்கிக்காவிட்டால் நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம் என்பதை நான் நம்பவில்லை; அழைக்கப்பட்ட பரிசுத்தர்களை விழுந்துபோகும்படிச் செய்கின்ற சுவிசேஷத்தையும் என்னால் ஒருபோதும் புரிந்துகொள்ளவும் முடியவில்லை." (சார்ள்ஸ் ஸ்பர்ஜனின் சுயசரிதத்தில் இருந்து)*

# போலிப்போதனைகளுக்கு விலகி நில்லுங்கள்

சத்தியம் ஒன்றே; அதற்குப் பலமுகங்கள் இல்லை. வேதம் சத்தியமாகக் தோற்றமளிக்கும் இரண்டு விளக்கங்களை ஒரு குறிப்பிட்ட சத்தியத்துக்கு அளிப்பதில்லை. அதனால்தான் வேத வசனத்திற்கு ஒரு அர்த்தம் மட்டுமே உண்டு (single sense) என்று சீர்திருத்தவாதியான மார்டின் லூத்தர் சொன்னார். வேதத்தை ஆராயும்போது, குறிப்பிட்ட சத்தியத்திற்கு இரண்டு முகங்கள் இருப்பதுபோல் நம் கண்களுக்குத் தோற்றமளித்தால், அதற்குக் காரணம் நாம் வேதத்தைப் படித்திருக்கும் முறையில் காணப்படும் தவறு மட்டுமே. தகுந்த ஆய்வு மட்டுமே அதன் மெய்விளக்கத்தை நமக்குப் புலப்படுத்தும். இது வேதத்தைப் பற்றிய சீர்திருத்த இறையியலின் அசைக்க முடியாத நம்பிக்கை. சிலவேளைகளில் நாம் அறிந்துகொள்ள விரும்பும் விஷயத்திற்கு வேதம் பதிலளிக்காமலிருக்கலாம். அதற்குக் காரணம் கர்த்தர் அதை நமக்கு வெளிப்படுத்தாமல் விட்டதுதான். அத்தகைய விஷயங்கள் ஒருபோதும் அடிப்படைப் போதனைகளாக இருக்காது; அந்த விஷயங்களுக்கு அமைதியே பதில், அவற்றிற்கு நாம் வியர்வை சிந்தி பதில் தேடவேண்டிய அவசியமில்லை. உதாரணத்திற்கு பரலோகம் எத்தகைய தன்மை கொண்டிருக்கும் என்பதுபோன்ற விஷயங்கள்.

மேலே விளக்கியதை நான் எழுதுவதற்குக் காரணம், பொதுவாக சுவிசேஷக் கிறிஸ்தவர்கள் மத்தியில் (Evangelical Christians) அடிப்படை சத்தியங்களுக்குக்கூட ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் கொடுக்கின்ற பொதுவான வழக்கம் காணப்படுவதுதான். அதையும்விட கொடுமையானதாக நான் கருதுவது, அடிப்படை சத்தியமொன்றைக் குறித்த விஷயத்தில், சத்தியத்துக்கு முற்றிலும் முரணான விளக்கத்தை வேதசத்தியமாக ஏற்று குரங்குப்பிடியோடு அதைப்பின்பற்றி வருவதுதான். அதைப் பற்றியதுதான் இந்த ஆக்கம். இந்த 21ம் நூற்றாண்டில் வேதப்புரட்டு எது (Heresy), போலிப்போதனை எது (False teaching) என்பதை உணர்ந்து அவற்றை இனங்கண்டு தவிர்த்துக்கொள்ளும் ஆற்றல் இல்லாத நிலையில் மேலைநாடுகளிலும், நம்மினத்திலும் இவெஞ்சலிக்கள் கிறிஸ்தவம் இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் பரவலாகக் காணப்படும் வேதஅறியாமையே. வேதஅறியாமை போதகர்களையும், ஆத்துமாக்களையும் இருட்டில் வைத்திருந்து வேதப்புரட்டுக்களும், போலிப்போதனைகளும் நம்மினத்தில் தலைவிரித்தாடும் நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

ஒரு பிரசங்கி துல்லியமற்ற பிரசங்கங்களை அளித்துவிடலாம். அதை அநேகர் இன்று செய்துவருகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் வேதத்தைப் பிரசங்கிப்பதற்கான போதிய ஆற்றலையும், அறிவையும்,

பயிற்சியையும், முதிர்ச்சியையும் கொண்டிராதிருப்பதே. துல்லியமற்ற பிரசங்கங்களைப் போலிப்போதனைகளின் பட்டியலில் சேர்க்கக்கூடாது. துல்லியமற்ற பிரசங்கங்கள் மேலெழுந்தவாரியான பிரசங்கங்களாக, சத்தியத்தைத் தெளிவாக, ஆழமாக வெளிப்படுத்தாதவை. அவை போலிப்போதனைகள் அல்ல; சிலவேளைகளில் அவை தவறான விளக்கங்களைக் கொண்டிருந்துவிட முடியும். அதுகூட பிரசங்கியின் அறிவின்மை மற்றும் ஆற்றலின்மையின் காரணமாகவே நிகழ்கின்றது.

### வேதப்புரட்டுகளும் (Heresies), போலிப்போதனைகளும் (False teaching)

வேதப்புரட்டுகளையும், போலிப்போதனைகளையும் தனித்தனியாகப் பிரித்து வேதம் விளக்கம் கொடுக்கவில்லை. இவை இரண்டையும் ஒரேவிதமானதாகக் கணித்தே வேதம் விளக்குகிறது. அத்தோடு போலிப்போதனைகளைக் குறிக்க வேதம் ஒரே பதத்தைப் பயன்படுத்தவில்லை. பல்வேறு வார்த்தைகளையும், வார்த்தைப் பிரயோகங்களையும் பயன்படுத்தி வேதம் போலிப்போதனைகளை இனங்காட்டுகிறது. வேதப்புரட்டுக்கு ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தையான Heresy யை மிகவும் ஆபத்தானதொன்றாகப் பயன்படுத்தியே எல்லோருக்கும் பழகிப்போய்விட்டது. அதாவது Heresy என்றால் மோசமானது, சத்தியத்துக்கு மாறான ஏனைய போதனைகள் அத்தகைய ஆபத்துகொண்டதில்லை என்பது போன்ற ஒரு எண்ணத்தை நாமே வளர்த்துக்கொண்டிருக்கிறோம். அந்தவிதமான கருத்தை வேதத்தில் நாம் பார்க்கவில்லை. அப்படியானால் இந்தப் பதங்களையும், இந்தப் பதங்கள் சுட்டுகின்ற போதனைகளையும் நாம் எப்படிப் பிரித்து அறிந்துகொள்வது என்பதையே இந்த ஆக்கத்தில் விளக்கவிரும்புகிறேன்.

வரலாற்றில் ஆதியிலிருந்தே திருச்சபை அடிப்படை வேதசத்தியங்களுக்கு எதிரான பல கேடான, ஆபத்தான போதனைகளைச் சந்தித்து வந்திருக்கிறது. வரலாற்று இறையியலைப் படிக்கிறவர்கள் அதற்கான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தீங்கான, ஆத்தும ஆபத்தை விளைவிக்கும் போதனைகளைத் திருச்சபை வரலாற்றில் அடையாளங்காட்டி, அவற்றிலிருந்து சபை தன்னைக் காத்துக்கொள்ளத் துணைசெய்யுமுகமாகவே வரலாற்று இறையியல் எழுதப்பட்டிருக்கிறது. வரலாற்று இறையியலை வாசித்துப் பார்த்தால் இன்று நம்மத்தியில் காணப்படும் அநேக போலிப்போதனைகளை திருச்சபை இன்று நேற்றில்லாமல் வரலாற்றில் சந்தித்து வந்திருக்கிறது என்பது உங்களுக்குப் புரியும். அத்தகைய போதனைகளை திருச்சபை வரலாற்றில் Heresy என்று கணித்து ஒதுக்கித் தள்ளியிருக்கிறது. Heresy எனும் ஆங்கில வார்த்தைக்கு தமிழில் ஒரு நல்ல தனி வார்த்தை இல்லை. இது கிரேக்க மொழியில் (Gk: hairesis) இருந்து ஆங்கிலத்துக்கு வந்த வார்த்தை. இந்த வார்த்தையில் அடங்கியிருக்கும் விளக்கங்களுக்கேற்ற ஒரே வார்த்தையை தமிழில் உருவாக்குவது கடினம். தமிழ் வேதம் இதைக்குறிக்க 'வேதப்புரட்டு' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. முதலில் Heresy என்றால் என்னவென்று கவனித்துவிட்டு தமிழ் வேதம் பயன்படுத்தும் வார்த்தையை ஆராய்வோம்.

திருச்சபை Heresy என்பதை அடையாளங்கான பின்வரும் உண்மைகளை வரலாற்றில் பயன்படுத்தியது; தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறது.

1. Heresy என்பது, சுவிசேஷ சத்தியங்களுக்கு முற்றிலும் முரணானது; சுவிசேஷத்துக்கு எதிரானது. பவுல் கலாத்தியர் 1ம் அதிகாரம் 8ம் வசனத்தில் 'நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் . . . வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்' என்று கூறியிருக்கிறார். இப்படிச் செய்வதை 'சுவிசேஷப் புரட்டல்' (1:7) என்றும் சொல்லியிருக்கிறார். சுவிசேஷத்தை சுவிசேஷமாக அடையாளங்காட்டுகின்ற அத்தனை சத்தியங்களுக்கும் முற்றிலும் எதிரான எதுவும் heresy.
2. ஆத்தும அழிவை உண்டாக்கும் போதனைகள் heresy. கிறிஸ்துவின் சுவிசேஷம் ஆத்துமாவை ஆதாயப்படுத்தி இரட்சிப்பை அளிக்கிறது. கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்புக்கு வழிகாட்டாமல், ஆத்துமாவுக்கு அழிவை உண்டாக்கும் (soul destroying) போதனைகளை heresy என்று அழைக்கிறது திருச்சபை. அது நியாயமானதுதான். ஏனெனில், Heresy ஆத்தும அழிவை மட்டுமே உண்டுபண்ணும்; ஆத்தும விடுதலைக்கு அதன் மூலம் வழியில்லை.
3. அடிப்படை வேதசத்தியங்களுக்கு முற்றிலும் முரணானது heresy. கடவுளைப் பற்றியும், திரித்துவ போதனை பற்றியும், மனிதனைப் பற்றியும், பாவத்தைப் பற்றியும், கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு, அவருடைய தெய்வீக மானுடத் தன்மைகள், அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், உயரெடுத்துக்கொள்ளப்படுதல் ஆகியவற்றோடு, கர்த்தரின் வேதத்தைத் திரித்து விளக்கி, பரிசுத்த ஆவியினால் ஊதித்தரப்பட்ட அதன் அழியாத்தன்மையையும், அதிகாரத்தையும் அடியோடு நிராகரித்து வெறும் மனித எழுத்தாக மட்டும் அதைக் கணிப்பது போன்ற, அடிப்படை வேதசத்தியங்களுக்கு முற்றிலும் முரண்பாடான போதனைகளையும் திருச்சபை heresy என்றே கணிக்கிறது.

இந்த விதத்தில் ஆத்தும அழிவை ஏற்படுத்துகிற போதனைகளை, கிறிஸ்தவர்களிடம் பாதகமான பிரிவினையை உண்டாக்குகிற போதனையை 'ஹெரசி' என்று திருச்சபை அழைத்து வந்திருக்கிறது; அத்தகைய போதனைகள் சபைக்கு ஆபத்தை ஏற்படுத்தாமலிருப்பதற்கான நடவடிக்கைகளையும் அது வரலாற்றில் எடுத்து வந்திருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் பேதுரு Heresy எனும் பதத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். 2 பேதுரு 2:1 ஐ கவனியுங்கள்,

> கள்ளத்தீர்க்கதரிசிகளும் (false prophets) ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் (false teachers) இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான

*வேதப்புரட்டுகளைத்* (heresy) *தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்.*

இந்த வசனத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் (false prophets), கள்ளப் போதகர்களும் (false teachers) வேதப்புரட்டுக்களை சபைக்குள் கொண்டுவந்துவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதைப் பேதுரு விளக்குகிறார். தமிழ் வேத பழைய திருப்புதலில் heresy என்பதற்கான கிரேக்க வார்த்தை (Gk: hairesis) 'வேதப்புரட்டு' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை 'சுயமாக முடிவுக்கு வந்து எடுத்த ஒரு கருத்து' என்ற எழுத்துபூர்வமான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. இருந்தபோதும் அந்த அர்த்தத்தில் மட்டுமே அந்த கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை. 2 பேதுரு 2:1ல், சிலர் தாங்களாகவே முடிவெடுத்து உருவாக்கிய ஆபத்தான போதனைகளைச் சபைக்குள் கொண்டுவர முயற்சி செய்வார்கள் என்று பேதுரு சொல்கிறார். ஆகவே, இந்த வார்த்தை 'சுயமாகத் தீர்மானிக்கப்பட்ட சபையில் பிரிவினைகளை ஏற்படுத்தக்கூடிய தீங்குவிளைவிக்கும் போதனை' என்ற அர்த்தத்தை இந்தப் பகுதியில் கொண்டிருப்பதால் தமிழ் வேதம் அதை 'வேதப்புரட்டுகள்' என்று மொழிபெயர்த்திருக்கிறது. உண்மையில் இந்த வார்த்தை அது காணப்படும் வேதப்பகுதியின் சந்தர்ப்பத்திற்கேற்ப மொழிபெயர்க்கவேண்டியதொன்றாக இருக்கிறது.

இதே வார்த்தை 1 கொரிந்தியர் 11:19ல் 'மார்க்கபேதம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

*உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்க பேதங்களும்* (heresy) *உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே.*

இந்தப் பகுதியில் 18ம் வசனத்தில் கொரிந்து சபையில் பிரிவினைகள் (Gk: Schismata; Eng: divisions) இருக்கிறதென்று பவுல் கூறுகிறார். 19ம் வசனத்தில், அத்தகைய பிரிவினைகளுக்கு மத்தியில் நிச்சயம் 'தீங்கை விளைவிக்கும் போதனைகளும்' உங்கள் மத்தியில் காணப்படும் என்கிறார் பவுல். இதை மார்க்கபேதம் என்ற வார்த்தையின் மூலம் சுட்டுகிறார். பிரிவினைகளுக்கு முக்கிய காரணமாக இந்த மார்க்கபேதங்களும் இருந்திருக்கின்றனவென்பதை பவுல் சுட்டுவதைக் கவனிப்பது அவசியம். வேதப்புரட்டு தீமையான பிரிவினையைச் சபையில் உருவாக்கும்.

கலாத்தியர் 5:20லும் 'மார்க்கபேதங்கள்' என்றே இருக்கிறது.

*விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,* (heresy),

இந்தப் பகுதியில் மாம்சத்தில் பாவத்தை அனுமதித்தால் அது எத்தகைய பாவச்செயல்களில் கொண்டுவிடும் என்பதைப் பவுல் விளக்குகிறார். அவற்றில் ஒன்று மார்க்கபேதங்கள் (வேதப்புரட்டு) என்பதைக் கவனியுங்கள்.

KJV, NKJV ஆகிய ஆங்கில மொழிபெயர்ப்புகள் இந்த இரண்டு வேதப்பகுதிகளிலும் இந்த வார்த்தையை Heresies என்றே மொழிபெயர்த்திருக்கின்றன. NASB இதை factions (பிரிவுகள்) என்றும், ESV இதை divisions (பிளவுகள்) என்றும் மொழிபெயர்த்திருக்கின்றன. தமிழ் வேதத்தின் மொழிபெயர்ப்பான 'மார்க்கபேதம்' – பிளவுகள், கோட்பாட்டுப் பிளவுகள் என்ற அர்த்தத்தை அளிக்கின்றன; அதில் தவறில்லை. ஏனெனில், இந்த வார்த்தை வேதவசனம் காணப்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி மொழிபெயர்க்கவேண்டிய வார்த்தை. ஆத்மீகத் தீங்கு விளைவிக்கும் போதனைகளால் ஏற்படுகின்ற பேதங்களையும், பிளவுகளையே இவை சுட்டிக்காட்டுகின்றன. கலா 5:20ல், ஏற்கனவே விரோதங்கள், சண்டைகள், பிரிவினைகள் என்ற வார்த்தைகளும், ஒவ்வொன்றும் வெவ்வேறு கிரேக்க வார்த்தைகளைக் கொண்டு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவை எல்லாவற்றிற்கும் தமிழில் ஒரே வார்த்தையைப் பயன்படுத்த முடியாது. ஒவ்வொரு கிரேக்க வார்த்தையும் தரும் அர்த்தத்திற்கேற்ப வசனம் அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தின்படியான வார்த்தையைப் பயன்படுத்த வேண்டியது மொழிபெயர்ப்பாளர்களின் பணியாக இருக்கிறது. அதனால் ஏனைய பொதுவான விரோதங்கள், சண்டைகள், பிரிவினைகளில் இருந்து தீங்கான போதனைகளினால் உருவாகும் பிளவை (heresy) வேறுபடுத்திக்காட்ட 'மார்க்கபேதங்கள்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அத்தோடு 2 பேதுரு 2:1ல், கள்ளத்தீர்க்கதரிசிகள், கள்ளப்போதகர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருகின்ற வார்த்தைகள் ஒளியின் தூதர்களாகத் தோற்றமளித்து உண்மைக்கு மாறானவற்றைப் போதிப்பவர்களைக் குறிக்கின்றன. இவர்களைப் போலித்தீர்க்கதரிசிகள், போலிப்போதகர்கள் என்று குறிப்பிடலாம். இந்த வார்த்தைகள், இவர்கள் வேதத்தைப் பயன்படுத்தி வேதத்தில் காணப்படாத சத்தியமல்லாதவற்றைப் போலியாகப் போதிக்கிறார்கள் என்பதை விளக்குகின்றன.

போலிப்போதகர்களின் மூலமாகவே ஆத்தும தீங்கு விளைவிக்கும் வேதப்புரட்டுகள் சபைக்குள் நுழைகின்றன என்கிறார் பேதுரு. போலிப்போதகர்கள் என்ற பொதுவான வார்த்தைப் பிரயோகம் சகலவிதமான சத்தியத்துக்கு மாறான போதனைகளை சபைக்குள் திணிக்க எத்தனிப்பவர்களைக் குறித்து வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. போலிப்போதனை எந்த ரூபத்தில் வந்தபோதும் அது எத்தனை மோசமானது என்று தன்னை இனங்காட்டிக்கொள்ளாது. அதை இனங்கண்டு தவிர்த்துக்கொள்ள வேண்டியது சபையினதும், கிறிஸ்தவர்களினதும் பொறுப்பு.

போலிப் போதனைக்கும் (false teaching), வேதப்புரட்டுக்கும் (heresies) இடையில் மிகப்பெரிய வேறுபாடிருப்பதாகக் காட்டி வேதம் அவற்றைப் பயன்படுத்தவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் புதிய ஏற்பாட்டு நிருபங்களின்படி மூன்று போலிப்போதனைகளை, அதாவது வேதப்புரட்டுக்களைத் திருச்சபை சந்தித்திருக்கிறது.

1. கிரியைவாதம்: கிரியைகளின் மூலம் விசுவாசத்தை அடைய எத்தனிக்கும் போதனைகள் – ரோமர், கலாத்தியர் நூல்களில் பவுல் இவற்றை நிராகரித்து விளக்கங்கொடுக்கிறார்.

2. நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம்: அன்டிநோமியனிசம்.

3. நொஸ்டிசிசம் – யோவான், கொலோசெயர், 1, 2 யோவான் ஆகிய நிருபங்கள் இந்தப் போலிப்போதனையை நிராகரித்து எழுதப்பட்டவை. இந்தப் போதனை ஆண்டவரை அறிவதற்கான இரகசிய வழியைக் காட்ட முற்படுவதோடு, கிறிஸ்துவின் மானுடப் பிறப்பையும் மறுதலிக்கிறது.

மேற்குறிப்பிட்ட வேதப்புரட்டுக்களான போலிப்போதனைகளை நாம் இந்த 21ம் நூற்றாண்டிலும் எதிர்கொள்கிறோம். வேதப்புரட்டுகளும், போலிப்போதனைகளும் ஆபத்தானவை. இரண்டுமே சுவிசேஷத்தை அடியோடு மாற்றி அதற்கு மாறானதொரு வழியை ஆத்துமாக்களுக்குக் காட்டுபவை. அதனால் போலிப்போதனை என்ற பதத்தையே மோசமான எந்தப் போதனைகளையும் அடையாளப்படுத்தும் பதமாக இந்த ஆக்கத்தில் பயன்படுத்தப்போகிறேன்.

சிலவருடங்களுக்கு முன்வரை நம்மினத்துக் கிறிஸ்தவத்தில் தன்னைப் பிரபல்யப்படுத்திக்கொள்ள முயன்ற ஒரு போலிப்போதனை, புறஜாதி மதங்களான இந்து மதத்திலும், இஸ்லாமிலும் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் என்ற கருத்தை முன்வைத்தது. இது மோசமான சத்தியப்புரட்டல். உதாரணத்திற்கு, இந்து மதத்தில் இயேசுவைப்பற்றிய வெளிப்படுத்தல் இருக்கிறது என்று விளக்கி, இந்துக்கள் கிறிஸ்தவ வேதமில்லாமல் தங்களுடைய இந்துவேதத்தைப் படித்தே கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பை அடையலாம் என்றும், இந்துப் படைப்புகளில் இயேசுவைப்பற்றி விளக்கியிருப்பதாகச் சொல்லி திருக்குறளில் இருந்தும், இந்துப் பெரியவர்களான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோரின் படைப்புகளைத் திருச்சபையில் வாசித்து அவற்றிலிருந்து கிறிஸ்தவ விளக்கம் கொடுப்பதற்கும் பெயர் வேதப்புரட்டு. இந்த வேதப்புரட்டர்கள் இரட்சிப்புக்காக கிறிஸ்துவை மட்டும் நம்பாமல், கிறிஸ்தவ வேதத்திலே மட்டும் நம்பிக்கை வைக்காமல், கிறிஸ்தவ வேதபோதனைகளுக்கு அடிப்படையிலேயே முரணான புறஜாதி மதத்தில் இருந்து கிறிஸ்தவ விளக்கங்கொடுத்து சுவிசேஷத்தையும், வேதத்தையும் சிதைக்கிறவர்களாக இருக்கிறார்கள். இதையே பங்களாதேஷில் இஸ்லாமியர்கள் மத்தியில் கிறிஸ்தவ நிறுவனமொன்று செய்யமுயற்சிக்கிறது.

இத்தகைய சத்தியப்புரட்டர்களை திருச்சபை எப்படி அணுகவேண்டும் என்பதைப் பவுல் தீத்து 3:10–11 வரையுள்ள வசனங்களில் விளக்குகிறார்.

> வேதப்புரட்டனாயிருக்கிற (Heretick) ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு. அப்படிப்பட்டவன்

நிலை தவறி, தன்னிலேதானே ஆக்கினைத்தீர்ப்புடையவனாய்ப் பாவஞ்செய்கிறவனென்று அறிந்திருக்கிறாயே.

பவுல் இந்நிருபத்தில் வேதப்புரட்டர்களை விட்டுவிலகு என்று சொல்கிறார். அத்தகையவர்கள் நிலைதவறி ஆக்கினைத்தீர்ப்புக்குடையவர்களாய் பாவஞ் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்கிறார். வில்லியம் ஹென்ரிக்சன் இந்த வசனத்தை விளக்கும்போது,

'இந்த வேதப்புரட்டன் கிரேக்க தத்துவத்தின் அடிப்படையிலானதொரு போலிப்போதனைக்கு இரையாகி சபையில் மோசமான பிரிவினையை உண்டாக்கியிருக்கிறான். இத்தகைய பிரிவினையை உருவாக்குகிற எவருமே வேதப்புரட்டர்கள்தான் என்கிறார்' (1 & 2 Timothy and Titus commentary).

இவன் சபையிலிருந்தும், சபை அங்கத்துவத்திலுமிருந்து நீக்கப்பட வேண்டியவன் என்கிறார் பவுல். அவன் 'நிலை தவறியவன்.' அவன் நேரான வழியில் போகாமல் பாவத்தில் வாழ்கிறான் என்கிறார் ஹென்ரிக்சன். அதுவும் இவன் தன் பாவத்தை அறிந்து உணர்ந்து செய்கிறவன் என்றும், அவனுடைய பாவங்களே அவனை நியாயந்தீர்க்கின்றன என்றும் விளக்குகிறார் ஹென்ரிக்சன். இவன் சபை ஒழுங்குநடவடிக்கைக்குள் கொண்டுவரப்பட்டு சபைநீக்கம் செய்யப்படவேண்டியவன் என்கிறார். இப்படியாக வேதப்புரட்டர்களுக்கு கிறிஸ்தவ சபையும், கிறிஸ்தவர்களும் தங்கள் வாழ்க்கையில் ஒருபோதும் இடங்கொடுக்காது இருக்கவேண்டும் என்று வேதம் எச்சரிக்கை செய்கிறது.

வேதப்புரட்டுகளுக்கு (Heresies) உதாரணங்களாக, மோர்மனிசம், கிரிஸ்டோடெல்பியன், யெகோவாவின் சாட்சிகள் போன்ற போதனைகளைக் குறிப்பிடலாம். மூன்று ஆள்தத்துவங்களடங்கிய திரித்துவப் போதனையை மறுதலிப்பது அடிப்படைப் போதனைக்கு எதிரானது; அத்தகைய போதனையை நிச்சயம் இந்தப் பிரிவுக்குள் அடக்கலாம். இயேசு கிறிஸ்துவின் மானுடத் தன்மையையோ அல்லது தெய்வீகத்தையோ நிராகரிப்பது வேதப்புரட்டு (ஹெரசி) எனும் இந்தப் பிரிவுக்குள் அடங்கும். நித்திய தண்டனை என்று ஒன்று கிடையாது; சகல மனிதர்களும் பரலோகத்தை எப்படியாவது அடைந்துவிடுவார்கள் என்ற (Universalism) போதனையும் இந்தப் பிரிவுக்குள் அடங்கும். பாவம் என்றொன்றில்லை என்று போதிக்கும் பெலேஜியனிசப் போதனையும் தீவிர வேதப்புரட்டே.

### நம்மினத்துக் கிறிஸ்தவத்தில் போலிப்போதனைகள்

கிறிஸ்தவ சபை இன்று சந்தித்து வரும் போலிப்போதனைகள் அநேகம். அவை அனைத்தையும் பட்டியலிட்டு இந்த ஆக்கத்தில் விளக்கிவிட முடியாது. அவற்றில் முக்கியமானவற்றை மட்டும் அடையாளங்காட்டி விளக்க விரும்புகிறேன். இவை எல்லாவற்றையுமே போலிப்போதனைகளாக அறிந்து உணராதவர்கள் நம்மினத்தில் பெருந்தொகையாக இருக்கிறார்கள். பொதுவாக வேதஞானம் இல்லாத குறையே அநேகரைப் போலிப்போதனைகளுக்கு

இரையாக்கிவருகிறது. கீழ்வரும் போலிப்போதனைகளை ஆராய்ந்து வாசகர்கள் தங்களையும், தங்களைச் சேர்ந்தவர்களையும் இவற்றிற்கு இரையாகாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

## 1. ஆர்மீனியனிசம் (Arminianism)

17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுந்த ஆர்மீனியனிசம் இன்றைக்கு பல கோணங்களில், பொதுவாக இவேன்ஜலிக்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவிக் கொடிநாட்டிக் கொக்கரித்துக் கொண்டிருக்கிறது. ஜெக்கபஸ் ஆர்மீனியஸினால் ஆரம்பிக்கப்பட்டு அவனுடைய சீடர்களால் பரப்பப்பட்டு இன்றைக்கு மெய்யான போதனையாக தன்னை இனங்காட்டி திருச்சபைப் பிரிவுகள் பெரும்பாலானவற்றை ஆண்டு வருகிறது ஆர்மீனியனிசம். ஆர்மீனியனிசம் இன்றைக்கு பல ரூபங்களில் நடமாடி வருவதால் அவை எல்லாவற்றையும் ஒரே பெட்டியில் போட்டு விளக்கிவிட முடியாது. அவற்றின் மத்தியில் தீவிரமான போலிப்போதனைகளையும், அந்தளவுக்குத் தீவிரமற்ற போலிப்போதனைகளும் காணப்படுகின்றன. தீவிரமான ரூபத்தில் காணப்படும் ஆர்மீனியனிசத்தை ஜே. ஐ. பெக்கர் விளக்கும்போது, 'இதன் தத்துவார்த்தரீதியிலான முடிவு வேதப்புரட்டான பெலேஜியனிசத்தில் போய் முடியும்' என்று சொல்லியிருக்கிறார். இந்தத் தீவிர ஆர்மீனியனிசத்தையே சினொட் ஆவ் டோர்ட் இறையியல் கவுன்சில் 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆய்வு செய்து போலிப்போதனையாக இனங்கண்டு நிராகரித்தது. ஆர்மீனியனும், மனிதநலவாதியுமான (Humanist) சார்ள்ஸ் பினி அப்படிப்பட்டவர். பினி மனிதன் பாவியல்ல எனும் பெலேஜியனிசப் போதனையை நம்பியவர். பினியே இரட்சிப்புக்காகத் 'தீர்மானம்' எடுக்கும் முறையை உருவாக்கியவர். தற்கால ஆர்மீனியனிசத்தைப் போலிப்போதனைகளின் பிரிவிலேயே சேர்க்க வேண்டும்.

ஆர்மீனியனிசம் அடிப்படை வேதசத்தியங்களை நிராகரிக்காவிட்டாலும், அவற்றில் மாற்றங்களைச் செய்து கடவுளைவிட மனிதனுக்கே இரட்சிப்புக்கான மகிமையை அளிக்கிறது. மனிதனுடைய கிரியையின் பங்கில்லாமல் இரட்சிப்பு அவனில் செயல்படவே முடியாது என்கிறது ஆர்மீனியனிசம். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் அது கடவுளுடைய இறையாண்மையிலும், மனிதனின் தன்மையிலும், பாவத்தின் தன்மையிலும், கிறிஸ்துவின் மரணத்தின் தன்மையிலும், அம்மரணத்தின் பலன்களை மனிதன் அடையும் முறையிலும் இறையியல் மாற்றங்களைச் செய்து இரட்சிப்பு பற்றிய மாறுபாடான போதனையை அளிக்கிறது. இதன் அடிப்படையிலேயே இன்றைக்கு, பாவத்தில் இருக்கும் மனிதன் தன்னை இரட்சித்துக்கொள்ள செய்யவேண்டிய வழிமுறைகள் என்று அநேக வழிமுறைகளைச் சுவிசேஷம் சொல்லுகிறவர்கள் உருவாக்கி ஆத்துமாக்களைத் தவறான வழியில் இட்டுச்செல்லுகிறார்கள். பியூரிட்டனான வில்லியம் ஏமெஸ், 'ஆர்மீனியனிசம் . . . வேதப்புரட்டை நோக்கி இட்டுச்செல்லும் தீவிரமான போலிப்போதனை' என்று விளக்கியிருக்கிறார். ஆர்மீனியனான ஜோன் வெஸ்லி, இரட்சிப்பில் கிருபைக்கான முக்கிய இடத்தை வலியுறுத்தினார்; அவருடைய ஆர்மீனியனிச நம்பிக்கைகள் ஆரம்பத்

தீவிரப் போலி ஆர்மீனிய நம்பிக்கைகளைவிட சிறிதளவு வேறுபட்டிருந்தன. இருந்தாலும் இன்று நம்மினத்தில் கடந்த 50 வருடங்களாக இருந்துவரும் ஆர்மீனியனிசம் போலிப்போதனை என்பதில் சந்தேகமே இல்லை. நம்மினத்து ஆர்மீனியனிசத்தில் மறுபிறப்புக்கு அல்லாமல் மனிதனுடைய கிரியைக்கே இரட்சிப்பில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்தகைய வேத ஆதாரமற்ற நம்பிக்கை, சுவிசேஷகர்களையும், போதகர்களையும் மறுபிறப்பே அடைந்திராததொரு கூட்டத்திற்கு ஞானஸ்நானமளித்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக அறிவித்து வலம்வர வைத்துக்கொண்டிருக்கிறது. போலிப்போதனை எந்த ரூபத்தில் வந்தாலும் அது போலிப்போதனைதான். ஆர்மீனியனிசம் இறையாண்மையுள்ள கடவுளுக்கு மகிமையளிக்காத வேதவிரோதமான போலிப்போதனை.

ஆர்மீனியனிசம் என்ற போலிப்போதனையின் பெயரை அறியாமல், அந்தக் கோட்பாட்டின் சத்தியப்புரட்டலை உணராமல், கிறிஸ்துவை விசுவாசிப்பதில் நமக்கும் பங்கிருக்கிறது என்ற போதனைக்குப் பலியாகி வாழ்ந்துகொண்டிருக்கிற கிறிஸ்தவர்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய இரட்சிப்புக்குத் தாங்களும் காரணமாக இருந்திருக்கிறோம் என்று தவறாக நம்பிவந்தாலும், அவர்கள் மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து வருவார்களென்றால் இறையாண்மையுள்ள கர்த்தரே அவர்களை இரட்சித்திருக்கிறார் என்பதுதான் உண்மை; சத்தியவெளிச்சத்தை அடையாமலிருப்பதால் அவர்கள் அதை உணராமலிருந்து வருகிறார்கள்.

## 2. காலசகாப்தக் கோட்பாடு (Dispensationalism)

ஆர்மீனியனிசத்தைப்போலவே நம்மினத்துக் கிறிஸ்தவத்தை ஆண்டுவரும் இன்னுமொரு போலிப்போதனை காலசகாப்தக் கோட்பாடு. J. N. டார்பி மற்றும் C. I. ஸ்கோபீல்ட் ஆகியோரின் கூட்டணியின் 19ம் நூற்றாண்டில் உருவாகி இவெஞ்சலிக்கள் கிறிஸ்தவர்கள் மத்தியில் கொடிநாட்டி வலம் வந்துகொண்டிருக்கிறது இந்தப் போலிப்போதனை. 19ம் நூற்றாண்டுக்கு முன் இதை திருச்சபை அறிந்திருக்கவில்லை என்கிறார் லீகன் டங்க்கன் (Dr. J. Ligon Duncan III). உண்மையில் இதை சுவிசேஷமாக நம்பி நம்மினத்துப் போதகர்களும், சுவிசேஷகர்களும் ஊழியம் செய்துவருகிறார்கள். இந்தப் போலிப்போதனையை அடையாளம் கண்டுகொள்ள முடியாதளவுக்கு இதைப்பற்றிய வரலாற்று, இறையியல் அறிவு இல்லாமல் அறியாமை அவர்களுடைய கண்களை மறைத்து வைத்திருக்கிறது. காலசகாப்தக் கோட்பாடு, வேதத்தை எந்த முறையில் வாசித்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விளக்கும் ஒரு வேதவிளக்க முறை. இத்தகைய வேதவிளக்க விதிமுறை வேதத்தில் காணப்படவில்லை. இதை ஜே. என். டார்பியே முதலில் உருவாக்கினார். செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட இந்தப்போதனை, வேத இறையியலையே தலைகீழாக மாற்றி, கர்த்தரின் மீட்பின் திட்டத்திற்கும், அவரின் வரலாற்று செயல்முறைகளுக்கும், அவரளிக்கும் இரட்சிப்பிற்கும் வேதபோதனைகளுக்கும் முற்றிலும் முரணான வகையில் விளக்கங்கொடுக்கிறது. காலசகாப்தக் கோட்பாடு போலிப்போதனை என்பதில் எந்த சந்தேகமும் இருக்கமுடியாது.

*காலசகாப்தக் கோட்பாட்டிலும் பல ஆபத்தான பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றில் தீவிர போலிப்போதனைகளாக அடையாளங் காணக்கூடியவைகளும் காணப்படுகின்றன. கிறிஸ்தவ திருச்சபையும், கிறிஸ்தவர்களும் உண்மை தெரியாமல் இந்தப் போதனைக்குப் பலியாகி, இதையே வேத இறையிலாக நம்பி வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் போதனையே சார்ள்ஸ் ரைரி* (Charles Ryrie), *சேன் ஹொட்ஜ்* (Zane C. Hodge) *ஆகியோர் இரட்சிப்புக்கு மனந்திரும்புதல் அவசியமில்லை, விசுவாசம் மட்டுமே போதும் என்ற ஆபத்தான இறையியல் போதனையை அளிக்க வழிகோளியது. காலசகாப்தக் கோட்பாடு அநாவசியத்துக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் அதற்குப்பின்னும் நிகழப்போகும் நிகழ்ச்சிகளுக்கு வேதத்திற்கு முரணான விளக்கங்களை அளித்து கிறிஸ்தவர்களைத் தவறான வழியில் வழிநடத்துகிறது. காலசகாப்தக் கோட்பாட்டில் திருச்சபைக்கு இந்த 21ம் நூற்றாண்டில் இடமில்லை. திருச்சபையை வெறும் இடைச்செருகலாகக் கணிக்கும் இந்தப் போதனை, கிறிஸ்து இஸ்ரவேலை மறுபடியும் மகிமையுள்ள நாடாக இந்த உலகத்தில் இருக்கச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்ற மிகத்தவறான போதனையின் மூலம் கிறிஸ்தவர்களைத் திசைதிருப்பிக்கொண்டிருக்கிறது. கர்த்தரின் மீட்பின் திட்டத்தில் சபையே அதிமுக்கிய இடத்தை வகிப்பதோடு புதிய உடன்படிக்கையின் நிறைவேற்றமாக திருச்சபையே இருக்கிறது என்பதே வேதமளிக்கும் போதனை. காலசகாப்தக் கோட்பாட்டின் செல்வாக்கிற்குள் அகப்பட்டு சீரழியாத திருச்சபைப் பிரிவுகளோ, இவெஞ்சலிக்கள் நிறுவனங்களோ, சுயாதீன சபைகளோ, சுவிசேஷகர்களோ நம்மினத்தில் இல்லை என்றளவுக்கு இதன் காட்டாட்சியை நம்மினத்துக் கிறிஸ்தவத்தில் காண்கிறோம்.*

### 3. கிரியைவாதம் (Legalism)

*நாம் அதிகம் கவனிக்காமல் விட்டுவிடுகிற, அசட்டை செய்துவிடுகிற இன்னொரு போலிப்போதனை லீகலிசம்* (Legalism). *இதைத் தமிழில் 'கிரியைவாதம்' என்று அழைக்கலாம் என்று நினைக்கிறேன். கிரியைகளுக்கே இந்தப் போதனை அதிமுக்கிய இடத்தைக் கொடுக்கிறது; வலியுறுத்துகிறது. அதாவது, நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைபிடிக்காவிட்டால் ஒருவர் இரட்சிப்பை அடையமுடியாது என்கிறது இந்தப் போதனை. கடவுளின் கட்டளைகளையோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட விதிகளையோ பின்பற்றி வந்தால் மட்டுமே கடவுள் முன் ஒருவர் நீதிமானாக முடியும் என்கிறது கிரியைவாதம். சகலவிதமான வேதப்புரட்டுக்களுக்கும் அடித்தளமாக கிரியைவாதம் அமைந்திருக்கிறது. கிரியைகளின் மூலமே இரட்சிப்பை அடையமுடியும் என்ற தவறான கருத்தை இந்தப்போதனை வலியுறுத்துகிறது. ரோமன் கத்தோலிக்க மதத்தில் இதைக் காணலாம். இதையே யூதப் பரிசேயர்களும் வலியுறுத்தி வந்திருந்தார்கள்.*

> *சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின் மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். (மத்தேயு 23:4)*

*அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார். (லூக்கா 18:9)*

கிரியைவாதத்திற்கு எதிராகவே பவுல் அப்போஸ்தலன் ரோமருக்கான நிருபத்தையும், கலாத்தியருக்கான நிருபத்தையும் (1–3), கொலோசெயருக்கான நிருபத்தையும் (2:20–23) எழுதினார்.

*நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்த துண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளை களுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. (கொலோசெயர் 2:20–23)*

கிரியைவாதம் ஆதிசபைக்காலத்தில் இருந்தே வந்திருக்கின்ற ஆபத்தான போலிப்போதனை. இந்த 21ம் நூற்றாண்டிலும் இது நம்மத்தியில் செல்வாக்கோடு இருந்துவருகிறது.

இவெஞ்சலிக்கள் சபை மற்றும் நிறுவனங்கள் செய்துவரும் சுவிசேஷப்பணியில் கிரியைவாதத்தை சந்திக்கிறோம். பாவியாகிய மனிதன் தன்னுடைய சுயதீர்மானத்தின் மூலம் இரட்சிப்பை அடையலாம் என்று அவனை வற்புறுத்தி கிறிஸ்துவுக்காக தீர்மானம் எடுக்கவைக்கிறபோது அங்கே கிரியைவாத போலிப்போதனையைச் சந்திக்கிறோம். கிரியைகள் மூலம் விசுவாசம் கிடைக்காது என்பதே பவுல் ரோமரில் தருகின்ற விளக்கமாக இருக்கிறது. கிரியைவாதம் இன்று பல்வேறு ரூபங்களில் கிறிஸ்தவ சமூகத்தில் நடமாடி ஆத்மீக ஆபத்தை விளைவித்து வருகிறது. லேமென் இவெஞ்சலிக்கள் ஐக்கியம் (Laymen Evangelical Fellowship) என்ற பிரிவு, விசுவாசிகள் திருச்சபையில் வாராவாரம் சபைத்தலைவர்களுக்கு முன் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யவேண்டும் என்று கட்டளையிட்டு, கத்தோலிக்க மதம் செய்வதைப்போன்ற ஒரு பாவமன்னிப்புக்கான முறையைப் பின்பற்றி வருகிறது. மனந்திரும்புதலின் ஒரு பகுதியாக பாவ அறிக்கை இருப்பதை வேதம் விளக்குகிறபோதும், கிறிஸ்தவர்கள் சபைத்தலைவர்களுக்கு முன்பும், ஏனைய கிறிஸ்தவர்கள் முன்பும் அநாவசியத்துக்குப் பாவ அறிக்கை செய்வதை அனுமதிக்கவில்லை. இவர்கள் இப்படிச் செய்வது நிச்சயம் கிரியைவாதமே. இவர்கள் மனந்திரும்புதலையும், பாவ அறிக்கைபற்றிய வேதபோதனையையும் மிகத்தவறாகப் புரிந்துவைத்திருக்கிறார்கள். எங்கெல்லாம் இரட்சிப்பை அடைவதற்கும், கிறிஸ்தவ வாழ்க்கையை விசுவாசமாக வாழ்வதற்கும் கிரியைகளை ‘நிபந்தனையாக’ வலியுறுத்துகிற எந்தப் போதனையும், எந்தக் கிறிஸ்தவ பிரிவும் கிரியைவாதத்தைப் பின்பற்றுகிறவையாக இருக்கின்றன.

இந்த ஆபத்தான, பழமையான போலிப்போதனை இன்றும் பலரூபங்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் நடமாடி வருகிறது.

### 4. நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம் (Antinomianism)

இந்தக் கோட்பாட்டின் ஆங்கிலப்பதம் அன்டிநோமியனிசம். இதுவரை அன்டிநோமியனிசம் என்றே இதை எழுதிவந்திருக்கிறேன். இதற்கு 'நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம்' எனபது சரியான தமிழ்ப் பதமாக எனக்குத் தோன்றுகிறது. அன்டிநோமியனிசப் போதனையின் கருத்துக்கேற்பவே அதை மொழிபெயர்க்கவேண்டும் என்பதால் இந்தப் பதத்தை உருவாக்கியிருக்கிறேன். நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம், நியாயப்பிரமாணம் பழைய ஏற்பாட்டு மக்களுக்கே கொடுக்கப்பட்டதாகவும் அதை விசுவாசிகளான கிறிஸ்தவர்கள் இக்காலத்தில் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் போதிக்கிறது. நியாயப்பிரமாணம் என்ற பதம் சகல பழைய ஏற்பாட்டுச் சட்டங்களையும் உள்ளடக்கிய பதமாக வேதத்தில் காணப்பட்டபோதும், அது பத்துக்கட்டளைகளை மட்டும் குறிக்கவும் வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கிருபையினால் விசுவாசத்தை அடைந்திருப்பவர்கள் பத்துக்கட்டளைகளைக் கவனத்தோடும், கருத்தோடும் பரித்தமாக்குதலுக்காகக் கடைபிடிக்கத் தேவையில்லை என்று விளக்குகிறது. அதற்குக் காரணம், எல்லாக் கட்டளைகளையும் கிறிஸ்து தன் வாழ்வில் நிறைவேற்றியிருப்பதால், அவர் மூலம் கிருபையினால் இரட்சிப்படைந்திருக்கின்ற நாம் அவற்றைப் பின்பற்ற அவசியமில்லை என்கிறார்கள் இவர்கள். கிறிஸ்துவை விசுவாசத்தினால் அடைந்திருக்கின்ற நாம் கட்டளைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற அவசியமில்லாதபடி அவரே நமக்காக அந்தக் கட்டளைகளைப் பூரணமாக நிறைவேற்றி நிறைவுசெய்திருக்கிறார் என்கிறது இந்தப் போதனை. கிருபையை அடைந்திருப்பவர்களுடைய கடமை கிறிஸ்துவை நேசிப்பது மட்டுமே, கட்டளைகளைப் பின்பற்றி வாழ்வதல்ல என்கிறார்கள் இவர்கள். கட்டளைகளைப் பின்பற்றுவது நம்மை கிரியைவாதத்துக்கே (Legalism) இட்டுச்செல்லும் என்று நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம் நம்புகிறது.

இந்த நியாயப்பிரமாண நிராகரிப்புவாதம் கர்த்தரின் கட்டளைகளைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறது. லேவியராகமத்தில் விளக்கப்பட்டிருக்கிற சடங்காச்சாரியம் மற்றும் பலிகள் தொடர்பானவற்றையும், இஸ்ரவேல் நாட்டுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட நீதிக்கட்டளைகளையுமே கிறிஸ்து புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அவசியமில்லாதபடி செய்திருக்கிறாரே தவிர, என்றென்றைக்கும் பின்பற்ற வேண்டிய ஒழுக்கவிதிகளான பத்துக்கட்டளைகளை அல்ல என்பதை இவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை. பத்துக்கட்டளைகளும் நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியாக இருந்தபோதும் அந்தக் கட்டளைகள் ஏனைய கட்டளைகளைவிட விசேஷமானவிதத்தில் வேறுபட்டவை என்பதை அவை கொடுக்கப்பட்ட விதத்திலும், இஸ்ரவேல் நாடாக உருவாகுமுன் படைப்பில் இருந்தே அவை இருந்திருக்கின்றன என்பதையும் கர்த்தரின் மீட்பின் திட்டம் நமக்கு விளக்குவதிலிருந்தும் நாம் அறிந்துகொள்ளுகிறோம். எனவே, கிறிஸ்தவர்கள் பரலோகத்தை

அடையும்வரை தங்களுடைய பரிசுத்தவாழ்க்கைக்கு அவசியமான கட்டளைகளாகக் கருதி கிருபையின் மூலமாகப் பத்துக்கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே வேதம் போதிக்கும் தவிர்க்க முடியாத உண்மை. இதை நியாயப்பிரமாண நிராகரிப்பு வாதம் நிராகரித்து பரிசுத்தமாக வாழ்வதற்கு கிறிஸ்துவின் அன்பு மட்டுமே போதும் என்கிறது. அதாவது, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நமக்காக நிறைவேற்றி இருப்பதால் அவர் மேல் அதிக அன்பு வைத்து வாழ்வது மட்டுமே கிறிஸ்தவர்களின் கடமை என்று விளக்குகிறது.

நியாயப்பிரமாண நிராகரிப்பு வாதம் இவாஞ்சலிக்கள் பிரிவுகள் அனைத்திலும் வெவ்வேறு கோணங்களில் தலைவிரித்தாடும் போலிப்போதனை. இது சீர்திருத்த கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பரவியிருப்பது மிகவும் சோகமானது. இந்தப் போக்கையே ‘புதிய உடன்படிக்கை இறையியல்’ என்ற பெயரில் பாப்திஸ்துகள் மத்தியில் எழுந்த ஒரு பிரிவினரிடமும் காண்கிறோம். நியாயப்பிரமாண நிராகரிப்பு வாதம் முக்கியமாக ஓய்வுநாளைப் (வாரத்தின் முதல் நாள்) பரிசுத்தமாக, ‘கிறிஸ்தவ சபத்துநாளாக’ கிறிஸ்தவர்கள் அனுசரிக்கவேண்டும் என்பதையும் அடியோடு நிராகரிக்கிறது. போலிப்போதனையாளர்களின் வரிசையில் இல்லாவிட்டாலும், Paul K. Jewett, Don A. Carson, John Piper போன்றோர், ஆண்டவருடைய நாளாக ஞாயிறு தினத்தை ஆராதனை நாளாகப் பயன்படுத்தவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டாலும், அதற்கும் பழைய ஏற்பாட்டு சபத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று வாதிடுகிறார்கள். படைப்பில் உருவான சபத்துக்கோட்பாடு புதிய ஏற்பாட்டில் தொடர்கிறது என்பதை இவர்கள் நிராகரிக்கிறார்கள். படைப்பில் உருவான சபத்தின் தொடர்ச்சியாக புதிய ஏற்பாட்டு ஆண்டவருடைய நாளைக்கணிக்க இவர்கள் மறுக்கிறார்கள். ஞாயிறு ஓய்வுநாளின் பயன்பாட்டை இவர்கள் மறுக்காவிட்டாலும், சபத்துக்கோட்பாட்டின்படி முழுமையாக இந்த நாளைக்கையாள வேண்டிய அவசியம் இல்லை என்கிறார்கள். புதிய உடன்படிக்கை இறையியலைப் பின்பற்றுகிறவர்கள் மத்தியிலும், புதிய கல்வினிஸ்ட் என்போர் மத்தியிலும் இந்தப் போக்கை இன்று நாம் காண்கிறோம். என்னைப் பொறுத்தளவில் இதுவும் ஒருவகையான நியாயப்பிரமாண நிராகரிப்புவாதப் போக்குத்தான். தற்காலத்து இவாஞ்சலிக்கள் கிறிஸ்தவ பிரிவுகள் மத்தியிலும், சீர்திருத்த கிறிஸ்தவர்கள் மத்தியிலும் தலைவிரித்தாடும் பல்வேறுவகையான நியாயப்பிரமாண நிராகரிப்புவாதப்போக்கிற்கு இடங்கொடுக்காமல் நம் ஆத்மீகப் பயணம் தொடரும்படியாக நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கிருக்கிறது. வரலாற்றில் எழுந்திருக்கும் 1689 விசுவாச அறிக்கை போன்ற விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப்போதனைகளும் ஓய்வு நாள் அனுசரிப்பை வலியுறுத்தி விளக்கியிருப்பதை மனதில்கொள்ள வேண்டும்.

### 5. செழிப்புபதேசம் (Prosperity Gospel)

20ம் நூற்றாண்டில் உருவான போலிப்போதனையே செழிப்புபதேசம். இது பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் பிரிவுகள் மத்தியிலும், அமெரிக்க

பாணியிலான மெகா சபைகள் மத்தியிலும் பல்வேறு ரூபங்களில் எல்லா நாடுகளிலும் உலவி வருகிறது. நம்மினத்தில் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் பிரிவுகள் மத்தியில் இது கவலையேற்படுத்தும் வகையில் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. 1950 களில் அமெரிக்காவில் தொலைக்காட்சி இவெஞ்சலிஸ்டான ஓரல் ரொபட்ஸ் என்பவரால் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1980 களில் ஜிம் பெக்கர், ஜிம்மி சுவேகர்ட் ஆகியோர் இதை பிரபல்யமாக்கினர்.

செழிப்புபதேசப் போதனையாளர், கிறிஸ்துவின் சுவிசேஷம் நமக்கு பரலோகத்தில் மட்டுமல்லாது இந்த உலகத்திலும் ஆத்மீகம் தவிர பொருளாதார, சரீர செழிப்பையும் வாக்குத்தத்தமாக நிறைவேற்றியிருக்கிறது என்று விளக்குகிறார்கள். அதனால் ஒரு கிறிஸ்தவன் வசதியில்லாமல் இந்த உலகத்தில் வாழ்ந்தால் அவன் பாவத்தில் தொடர்ந்திருக்கிறான் என்றும், விசுவாசக்குறைவுடையவனாய் இருக்கிறான் என்றும் அவர்கள் விளக்குகிறார்கள்.

> *நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:5)*

> *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)*

ஆகிய வசனங்களைப் பயன்படுத்தி இவர்கள், இயேசு கல்வாரியில் மரித்தபோது நம்முடைய சகல நோய்களையும் பூரணமாகக் குணமாக்கவும், நம்முடைய பாவமான 'பொருளாதார வசதிக்குறைபாட்டையும்' நீக்கவே மரித்தார் என்று விளக்குகிறார்கள். அத்தோடு கிறிஸ்தவர்கள் தேவ இராஜ்யப்பணிக்கு அதிகமாகக் கொடுத்தால் அவர்களுடைய செல்வம் பலமடங்கு அதிகரிக்கும் என்றும் போதிக்கிறார்கள். வாழ்க்கையில் செழிப்பை கிறிஸ்து சுவிசேஷ அனுபவத்தின் மூலம் தந்திருப்பதால் வேத வசனங்களைப் பயன்படுத்திப் பேசி நாம் செழிப்பை ஆண்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறது இந்த செழிப்புபதேசத்தைப் போதிக்கும் Word of Faith எனும் பிரிவு.

அமெரிக்காவில் ஜொயல் ஒஸ்டின், பெனிஹின், ஜொய்ஸ் மாயர் போன்றோர் இப்போதனையைத் தற்காலத்தில் பரப்புகிறவர்கள். ஜொயல் ஒஸ்டீன் போன்றோர் வேதப்புரட்டர்கள் என்று சொல்லுமளவுக்கு அளவுக்குமீறிப் போலிப்போதனைகளை முன்வைக்கிறார்கள். நம்மினத்தில் செழிப்புபதேசம் செய்யாத பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் பிரசங்கிகளைக் காணமுடியாது. பால் தினகரன், மோகன் சி. லாசரஸ் போன்றோர் முன்னணி செழிப்புபதேச போலிப்போதகர்கள். பொருளாதார வசதிகள் குறைந்த மக்கள் முன் பணத்தைக் குறியாகக் கொண்டே

இந்தப்போதனையாளர்கள் நம்மினத்தில் செயல்பட்டு வருகிறார்கள். சாமன்ய மக்களை ஏமாற்றி கிறிஸ்தவத்தின் பெயரில் பணத்தைச் சுரண்டுவதற்கு இந்தப் போலிப்போதனை அநேகருக்கு நம்மினத்தில் கைகொடுத்து வருகிறது. பால் தினகரன் அளவுக்கு வருமானம் இல்லாத சாதாரண சுவிசேஷகர்களும் பணத்தைப் பெருக்கிக்கொள்ளுவதற்காக இத்தகைய ஊழியத்தில் ஈடுபட்டு ஆத்துமாக்களை வஞ்சித்து வருகிறார்கள். அப்படியான சிலரை நான் நேரிலேயே சந்தித்திருக்கிறேன். பொருளாதரத்தில் வளர்ந்திராத சமூகங்கள் காணப்படுகின்ற ஆசிய நாடுகளிலும், ஆப்பிரிக்காவிலும் எல்லையற்று இந்த செழிப்புபதேசம் தலைவிரித்தாடி வருகிறது.

உண்மையில் கிறிஸ்துவின் சுவிசேஷம் ஆத்மீக செழிப்பைத் தவிர வேறு எந்தச் செழிப்பையும் எவருக்கும் வாக்குத்தத்தமாகக் கொடுக்கவில்லை. இயேசு கிறிஸ்துவோ, அவருடைய அப்போஸ்தலர்களோ அத்தகைய செழிப்பை சுவிசேஷ அனுபவத்தின் மூலம் அடையலாம் என்று வாக்குத்தத்தமாக பிரசங்கங்களில் விளக்கவில்லை. ஒருவர் வசதியுள்ளவராக இருப்பதற்கும் அல்லது வாழ்நாள் முழுவதும் நல்ல சுகத்தோடு வாழ்வதற்கும் சுவிசேஷ அனுபவத்திற்கும் தொடர்பில்லை. சுவிசேஷ அனுபவம் பரலோக வாழ்க்கையையே நிச்சயப்படுத்துகிறது. வேதவார்த்தைகளை மிகத்தவறாகப் பயன்படுத்தி விளக்கங்கொடுத்ததால் உருவானதே செழிப்புபதேசம்; அதற்கும் பரிசுத்த வேதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக, கிறிஸ்தவ வேதம் நம் துன்பங்களுக்கு மத்தியிலும் நாம் விசுவாசத்தோடு வாழ்ந்து கிறிஸ்துவை மகிமைப்படுத்தவேண்டும் என்று விளக்குகிறது. எலிசாவின் காலத்தில் அவருக்குக் கீழ் பயிற்சிபெற்று வந்த எத்தனையோ தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் மிகவும் வசதிக்குறைவுள்ளவர்களாகவே இருந்திருக்கின்றனர். யோபு தன் வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்கள் கர்த்தர் அனுமதித்து நிகழ்ந்தவையே. கஷ்டங்களும், துன்பங்களும், பொருளாதார வசதியின்மையும் சகல மானுடத்திற்கும் பொதுவானது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை துன்பங்கள் நிறைந்ததாகவே இருந்திருக்கிறது. அவர் துன்பங்களுக்கு மத்தியில் எவ்வாறு விசுவாசத்துடன் வாழ்வது என்பதை நமக்குக் கற்றுத்தருகிறார். பேதுரு எழுதிய நிருபங்களில் ஓரிடத்திலாவது துன்பமற்ற, வசதிகள் கொண்ட வாழ்க்கைக்கான வழிமுறைகளை அவர் விளக்கவில்லை; மாறாக துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் ஆறுதல் மட்டுமே தந்திருக்கிறார். செழிப்புபதேசம் இன்று ஆத்துமாக்களை மெய்யான சுவிசேஷத்திலிருந்தும், மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கையிலிருந்தும் திசைதிருப்பும் போலிப்போதனையாக உலவி வருகிறது.

## போலிப்போதனைகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளுதெப்படி?

***1. பொதுவான வேத அறிவு கிறிஸ்தவர்களுக்கு அவசியம்*** – நம்மினத்தில் பொதுவாகவே ஆத்துமாக்களுக்கு வேதஅறிவு குறைவாக இருப்பது அவர்கள் இலகுவாக போலிப்போதனைகளின் வலையில் விழுந்துவிடுவதற்கு பெரும் வாய்ப்பாக இருந்து விடுகிறது. கிறிஸ்தவர்கள் வேதத்தைக்

கருத்தோடு வாசிப்பது அவசியம். அத்தோடு வேதத்தில் ஆரோக்கியமான பொதுவான அறிவு அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் அவசியம். வேதம் மட்டுமே நமக்கு கடவுளைப்பற்றியும், அவருடைய செயல்களைப் பற்றியும் விளக்குவதால் அதை அதிகாரமுள்ள வார்த்தையாகக் கொண்டே நாம் அனைத்தையும் ஆராய்ந்து சரி எது, தவறு எது என்று பிரித்துத் தரம்பார்த்து நம்ப வேண்டும். அத்தகைய பொதுவான ஆரோக்கியமான வேதஅறிவை கிறிஸ்தவர்கள் எப்பாடுபட்டாவது பெற்றுக்கொள்ள வேண்டும். அது மட்டுமே பெரும்பாலான வேதப்புரட்டுகளிலும், போலிப்போதனைகளின் வலைகளிலும் விழுந்து விடுவதை தடுத்துக்கொள்ள உதவும். வேதத்தில் நல்லறிவில்லாத சிலர் பலவிதமான போலிப்போதனைகளில் சிக்கிக் காலத்தை வீணாக்கிவிட்டு நான் பணிபுரியும் சபைக்கு வருவதை அனுபவத்தில் காண்கிறேன். அவர்களில் சிலருக்கு தங்களுடைய கிறிஸ்தவ அனுபவத்தைக் குறித்தும் சந்தேகம் இருந்திருக்கிறது. இதெல்லாம் முறையான வேதஅறிவில்லாததால் உண்டாகும் பாதிப்புகள்.

*2. **விசுவாசத்துக்குரிய அடிப்படை சத்தியங்களை கிறிஸ்தவர்கள் அறிந்துவைத்திருக்கவேண்டும்*** – பொதுவான வேத அறிவுக்கு மேலாக, அடிப்படையான விசுவாசத்திற்குரிய சத்தியங்களை கிறிஸ்தவர்கள் தெரிந்துவைத்திருக்க வேண்டும். இவற்றைத் திருச்சபைகள் தெளிவாக அறிந்துவைத்திருந்து முக்கியமாக சபை அங்கத்தவர்களுக்குப் போதிக்கவேண்டும். நம்மினத்தில் தெளிவான போதனைகளைக்கொண்டோ, முறையான அங்கத்துவத்தைக்கொண்டோ, சத்தியத்தெளிவுள்ள தலைவர்களைக்கொண்டோ சபைகள் அமையாதிருப்பதால்தான் போலிப்போதனைகள் 'சபைகள்' என்ற பெயரில் இருக்கும் அநேக இடங்களில் ஆண்டுவருகின்றன. அதுவும் தனிநபர் ஆளுகையில் இருக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் போலிப்போதனையின் கருவிடங்களாக இருந்து ஆத்துமாக்களை நம்மினத்தில் வஞ்சித்து வருகின்றன. அடிப்படையான விசுவாசத்துக்குரிய சத்தியங்களை நமது முன்னோர்கள் விசுவாச அறிக்கைகளிலும், வினாவிடைப் போதனைகளிலும் தந்திருக்கின்றனர். முப்பத்தி இரண்டு அதிகாரங்களில் அடிப்படை சத்தியங்களை 1689 விசுவாச அறிக்கை நமக்கு வெளிப்படையாகவே விளக்குகிறது. இவை, நாம் விசுவாசிக்க வேண்டிய சத்தியங்களைத் தெளிவாக அறிந்துவைத்திருந்து போலிப்போதனைகளிடம் சிக்கிவிடாமல் இருக்க நம்மைப் பாதுகாக்கும். விசுவாச அறிக்கைகளையும், வினாவிடப்போதனைகளையும் அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படாத சபைகளும், அவற்றை விசுவாசத்தோடு பயன்படுத்தாத சபைகளும், ஆத்துமாக்களுமே பொதுவாகப் போலிப்போதனைகளிடம் இலகுவாக சிக்கிவிடுகிறார்கள். உண்மையில் இவற்றைத் தெளிவாக அறிந்துவைத்திராத எவரும் வரலாற்றுக் கிறிஸ்தவத்தோடு, அதாவது கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் ஸ்தாபித்து வளர்ந்துவருகின்ற கிறிஸ்தவத்தோடு சம்பந்தமில்லாதவர்களாகவே இருப்பார்கள். (1689 விசுவாச அறிக்கையையும், கிறிஸ்தவ வினாவிடைப்போதனை நூலையும் சீர்திருத்த வெளியீடுகள், சென்னை முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்).

பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் சபைகளில் தெளிவான அடிப்படை வேதசத்தியங்களுக்கு இடமில்லாததால்தான் செழிப்புபதேசமாகிய போலிப்போதனைக்கு அவை இரையாகியிருக்கின்றன. சபை அமைப்பையும், தெளிவான வேதக்கோட்பாடுகளைப் பின்பற்றியும் அமைக்கப்படாத சுயாதீன சபைகளில் ஆர்மீனியனிசமும், காலப்பாகுபாட்டுக் கோட்பாடும், கிரியைவாதமும், நியாயப்பிரமாண நிராகரிப்புவாதமும் ஆதிக்கம் செலுத்துவதில் ஆச்சரியமே இல்லை. விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப்போதனைகளும் வேத சத்தியங்களை மட்டுமே விளக்குபவையாக இருந்து வேதவழியில் ஆத்துமாக்கள் பயணம் செய்யத் துணைபோகின்றன.

***3. போலிப்போதனைகளை கிறிஸ்தவர்கள் இனங்கண்டுகொள்ள வேண்டும்*** – கிறிஸ்தவர்கள், தற்காலத்தில் நம்மத்தியில் வலம் வந்துகொண்டிருக்கும் போலிப்போதனைகளைப் பற்றியும் அறிந்து வைத்திருப்பது அவசியம். நம்மினத்தில் சில காலத்துக்கு விஷத்தைப்போல ஆபத்தேற்படுத்திவந்த, இந்து மதத்தில் இயேசுவைக் காணும் போதனைக்குப் பரவலாகவே கிறிஸ்தவர்கள் பலியாகியிருந்தார்கள். அதற்குக் காரணம் வேதஅறிவின்மையும், போலிப்போதனைகளை அடையாளம் கண்டுகொள்ளும் பக்குவமின்மையுந்தான். போதகர்கள் சத்தியத்தெளிவுள்ளவர்களாக இருந்து போலிப்போதனைகளை அடையாளம் கண்டு ஆத்துமாக்கள் அவற்றில் விழுந்துவிடாமல் இருக்கத் துணைபுரிகிறவர்களாக இருக்கவேண்டும். சத்தியத்தை எந்தளவுக்கு தெளிவாக விளக்கிப் போதித்து ஆத்துமாக்களை வழிநடத்தவேண்டுமோ, அந்தளவுக்கு அசத்தியமான போலிப்போதனைகளில் இருந்தும் ஆத்துமாக்களையும், சபைகளையும் காக்கவேண்டிய பொறுப்பும் போதகர்களுக்கு இருக்கிறது.


**முடிவாக . . .**

வேதப்புரட்டுகளும், போலிப்போதனைகளும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையும் இந்த உலகத்தில் திருச்சபையைத் தாக்கவே செய்யும். அவற்றில் இருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ளும்படி இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் அடிக்கடி எச்சரித்து வந்திருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டு நிருபங்களில் போலிப்போதனைகளை அடையாளங்கண்டு எச்சரிக்காத நிருபமே இல்லை என்றுதான் கூறவேண்டும். இதை நான் எழுதி விளக்கும்போது நம்மினத்துக் கிறிஸ்தவம் இருந்துவரும் மிகவும் ஆபத்தான சூழலை எண்ணி என்னால் வருந்தாமல் இருக்கமுடியவில்லை. தெளிவான சத்தியங்களை அறியாமலும், அவற்றுக்கு இருதயத்திலும், வாழ்க்கையிலும் இடங்கொடுக்காமலும் வெறும் சராசரிகளாக, பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்துவருகிறவரை போலிப்போதனைகளுக்கு நம்மினத்துக் கிறிஸ்தவம் தொடர்ந்தும் இரையாகிவரும். முக்கியமாக இளைஞர்கள் இந்த 21ம் நூற்றாண்டில் பக்திவிருத்தியோடு சிந்திக்கிறவர்களாக இருந்து வேதசத்தியங்களில் தேர்ச்சியடைந்து வருவது எதிர்காலத்தில் கிறிஸ்தவம் நல்ல நிலையில் காணப்பட ஆண்டவர் கிருபை பாராட்டலாம்.

# பாவத்தின் தன்மையை அறிவதால் வரும் பயன்கள்

– ரால்ப் வென்னிங் –

**1. பாவத்தைவிட மோசமானது எதுவும் இல்லை.**




*பாவத்தைவிட நமக்கு அதிக தீங்கை ஏற்படுத்தக்கூடியது எதுவும் இல்லை. பாவம், நமக்கு துன்பத்தையும், மரணத்தையும், பிசாசையும், நரகத்தையும்விட அதிக தீமையானது. பிரச்சனையும், துன்பமும், மரணமும், பிசாசும், நரகமும் பயங்கரமானதுதான். அவைகளிலிருந்து விடுதலைபெற நாம் கடவுளிடம் ஜெபிக்க வேண்டும். ஆனால், பயங்கரமான இந்தக் காரியங்கள் யாவும் நமக்குக் கொண்டு வரும் தீங்கைக் காட்டிலும் பாவகரமான வாழ்க்கை நமக்கு ஏற்படுத்தும் தீங்கு அதிகமானது.*

*முதலாவது, நம்முடைய வாழ்க்கையில் அநேக பிரச்சனைகளும், துன்பங்களும் உண்டு. கேடான வாழ்க்கை முறை அதையெல்லாம்விட மோசமானதா? ஆம், உண்மையாகவே அதையெல்லாம்விட மோசமானதுதான். இயேசு சொன்னார்,*

> *“ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்” (மத்தேயு 10:28).*

*நரகத்திற்குப்போய் அழிவதைக் காட்டிலும் சாவது மேலானது என்று சொல்லலாம். ஒருவன் துன்பங்களை அனுபவித்தும் பாவம் செய்யாமல் இருந்துவிட முடியும். ஆனால் பாவம் செய்த ஒருவன் துன்பங்களை அனுபவிக்காமல் போக வழியே இல்லை.*

*அ. துன்பப்படுவதைத் தெரிவுசெய்வது நமக்கு நல்லதாக அமைந்துவிடலாம். ஆனால் பாவம் செய்வதைத் தெரிவுசெய்வது ஒருபோதும் நன்மையைத் தராது. மூன்று இளம் வாலிபர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்வதைவிட நெருப்பில் துன்பத்தை அனுபவிப்பதையே தெரிவுசெய்தார்கள் (தானியேல் 3). மோசே, கொஞ்சக்காலம் பாவத்தின் சந்தோஷங்களை அனுபவிப்பதைவிட, தேவனுடைய மக்களோடு, சிறுமைப்படுவதையே தெரிவுசெய்தார்.*

*அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, (எபிரெயர் 11:25).*

துன்பங்களின் மூலமாக நமக்கு எந்தவொரு நன்மையும் ஏற்படாது என்று நாம் சொல்லிவிட முடியாது. தான் துன்பப்பட்டது நல்லது என்று சங்கீதக்காரன் அறிந்திருந்தார்.

*நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். (சங்கீதம் 119:71).*

ஆனால், பாவம் செய்தது நல்லது என்று நாம் ஒருபோதும் சொல்லமுடியாது. கேடான காரியங்களை, அவற்றை செய்வதற்கு முன்னும் செய்தபிறகும், ஒருபோதும் நல்லதாக இருக்காது.

ஆ. ஒரு விசுவாசிக்கு ஏற்படும் பிரச்சனைகள், அதனால் உண்டாகும் துன்பங்கள் அவனை கடவுளிடம் நெருங்கச் செய்வதால், அதைக் குறித்து அவன் சந்தோஷப்பட வேண்டும். ஆனால் பாவமோ கடவுளிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. யாக்கோபு சொல்லுகிறார்,

*"என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்." (யாக்கோபு 1:2–3).*

கடவுள் தம்முடைய மக்களைத் துன்பங்களின் மூலமாக பரிசோதிப்பதை விரும்புகிறார். ஏனென்றால், அதன் மூலமாக அவர்கள் உறுதியான விசுவாசிகளாகிறார்கள் என்பதை அவர் அறிவார்.

*இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1).*

இ. சோதனைகளின் காரணமாக துன்பங்களை அனுபவிக்கிறவர்களுக்கு வேதம் அநேக ஊக்கந்தரும் போதனைகளைத் தன்னில் கொண்டிருக்கிறது. ஆனால் பாவகரமான செயலை அது ஒருபோதும் ஊக்கப்படுத்துவதில்லை. பிரச்சனைகளில் நாம் சிக்கிக்கொண்டிருக்கிற வேளையில், கடவுள் நமக்கு உதவுவதாக வாக்களித்திருக்கிறார். ஆனால், நாம் கேடான காரியங்களைச் செய்கிறபோது, கடவுள் தம்முடைய பிரசன்னத்தை நம்மைவிட்டு விலக்கிக்கொள்ளுகிறார். நமக்கு ஏற்படும் பிரச்சனைகளின்போது கடவுள் நமக்கு ஆறுதலாக இருக்கிறார் என்பது அவர் நம்மீது அன்புகாட்டுகிறார் என்பதற்கான அடையாளம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதால் அவர் இதை நமக்குச் செய்கிறார். ஆனால் பாவகரமான செயலில் நாம் இன்பம் காண்போமானால், நாம் தேவனுடைய பிள்ளைகள் அல்ல என்பதற்கு அது அடையாளம்.

ஈ. கடவுள் தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையிலிருந்து பாவகரமான ஆசைகளை அழிப்பதற்குப் பிரச்சனைகளையும் சோதனைகளையும் பயன்படுத்துகிறார். சங்கீதக்காரன் சொல்லுகிறார்,

> "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்." (சங்கீதம் 119:67).

நிச்சயமாக அது கடவுள் ஏற்படுத்திய உபத்திரவம், எனவேதான் அவர் கடவுளிடம் திரும்பினார். ஆகவே பாவம் செய்வதைவிட, சில சோதனைகளை எதிர்கொள்ளுவதே சிறந்தது. ஏனென்றால், பாவம் நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கவே செய்யும். கடவுள் தம்முடைய நல்ல நோக்கத்தின்படியாகவே, தம்முடைய மக்களின் வாழ்க்கையில் சிலவேளைகளில் உபத்திரவங்களை அனுமதிக்கிறார். ஆனால் கேடான செயல்களில் எந்த நல்ல நோக்கமும் இருப்பதில்லை. பாவத்தில் எந்த நன்மையும் இல்லை. உபத்திரவங்கள் விசுவாசிகளை மென்மேலும் பூரணப்படுத்துகிறது. பாவம் நம்மை மென்மேலும் சீர்குலைக்கிறது. தேவபக்தியற்ற எந்தப் பாவியும், கடவுளுக்குத் தூரத்தில் இருக்கிறான். அவனுக்கு வாழ்க்கையில் எந்தவொரு நம்பிக்கையும் இல்லை.

> அக்காலத்திலே இயேசுகிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கை யில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர் களென்று நினைத்துக்கொள்ளுங்கள். (எபேசியர் 2:12).

ஆனால் உபத்திரவப்படுகிற விசுவாசியோடு கடவுள் இருக்கிறார், அவனுடைய உபத்திரவத்தின் மத்தியிலும் அவனுக்கு ஒரு நம்பிக்கை உண்டு.

உ. கிறிஸ்துவினிமித்தமாகவும், தேவனிமித்தமாகவும், நீதியினிமித்தமாகவும் ஒருவன் உபத்திரவங்களையும் துன்புறுத்தல்களையும் சகித்தால், அவனுக்கு அது மகிமை. பாவகரமான சோதனைக்கு எதிராகப் போராடி, அவற்றிற்கு இரையாவதைத் தவிர்த்து, அதன் காரணமாக துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தாலும், அது கடவுளுடைய வல்லமை அழகாக நம்மில் செயல்படுகிறது என்பதையே காட்டுகிறது. கடவுளுடைய பரிசுத்த நீதியினால் கண்டிக்கப்பட்டவர்களாக, தீமைக்கு அடிமையாயிருப்பதைக் காட்டிலும், கடவுளுக்காக இரத்தசாட்சியாக சாவதே சந்தோஷமானது. (1 பேதுரு 4:1–16). பாவம் செய்வதைவிட துன்பங்களை அனுபவிப்பதே நல்லது.

இரண்டாவது, பாவத்தினால் வருகிற தீமை மரணத்தைவிட மோசமானது. மரணம் மனிதர்களுடைய பயங்கரமான எதிரி. ஆகவேதான் மனிதர்கள் மரணமடைவதற்கு விரும்புவதில்லை. ஆனால் பாவம் மரணத்தைவிட மிகவும் பயங்கரமான எதிரி.

மரணம் சரீரத்தையும் ஆத்துமாவையும் பிரிக்கிறது; அது நம்முடைய அன்புக்குரியவர்களையும், உடைமைகளையும் நம்மைவிட்டுப் பிரிக்கிறது.

எனினும், ஒரு விசுவாசி இந்த உலகத்தில் தான் அனுபவித்த கடவுளுடைய நித்திய அன்பிலிருந்து அதனால் ஒருபோதும் அவனைப் பிரிக்கமுடியாது. கேடான வாழ்க்கை மரணத்தையும்விட மோசமானது. ஏனென்றால், ஒரு பாவியை, அவன் இந்த உலகத்தில் வாழ்கிறபோதே அது கடவுளுடைய தயவுள்ள அன்பிலிருந்து பிரிக்கிறது. பாவம் மரணத்தைவிட மோசமானது, ஏனென்றால், கீழ்ப்படியாமையாகிய முதல் பாவமே மனிதர்களுக்கு மரணத்தைக் கொண்டு வந்தது.

> *அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். (ஆதியாகமம் 3:6).*

> *நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். (ஆதியாகமம் 3:19).*

> *"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." (ரோமர் 5:12).*

அ. மனிதனுக்கு மரணத்தைப் பற்றிய பயம் இருக்கிறது. மனிதர்கள் மரணமடைவதற்கு விருப்பமற்றவர்களாக இருப்பதுமட்டுமல்லாமல், அதைக்கண்டு அஞ்சுகிறார்கள். பாவம் மரணத்தின் கொடுக்கு.

> *மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். (1 கொரிந்தியர் 15:56).*

அது பாவியைக் கடவுளிடமிருந்து நித்தியத்திற்கும் பிரிக்கிறது. பாவம் இந்த உலகத்தில் தோன்றாமல் இருந்திருந்தால், மரணமும் வந்திருக்காது; மரணத்தைப் பற்றிய பயமும் இருந்திருக்காது. விசுவாசத்தின் மூலமாக, கிறிஸ்துவினுடைய மரணத்தினால் பாவத்தின் கொடுக்கு எடுக்கப்பட்டுவிட்டால், மரணத்தைப் பற்றிய பயம் இல்லாமலாகிவிடும்.

> *ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். (எபிரெயர் 2:14–15).*

ஆ. மரணம் இந்த உலக வாழ்க்கையை இழக்கச்செய்கிறது. பாவம் இந்த உலகத்தில் ஆவிக்குரிய வாழ்க்கையையும், மறுமையில் பரலோகத்தையும்

இழக்கச்செய்கிறது. மரணம் நம்முடைய சரீரத்தைக் கொல்லுகிறது, ஆனால் பாவம் நம்முடைய ஆத்துமாவை நரகத்தில் சிறையாக்குகிறது. ஆகவே, மரணத்தினால் கொல்லப்படுவதைக் காட்டிலும் பாவத்தினால் கொல்லப்படுவது பயங்கரமானது என்று நாம் சொல்லலாம்.

> *நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்தபின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூக்கா 12:5).*

அதுபோல, மரணம் நம்முடைய சரீரத்தைச் சிதைக்கிறது, ஆனால், பாவமோ மனிதத் தன்மையின் மிக முக்கியமான பகுதியாகிய ஆத்துமாவைச் சிதைக்கிறது. கேடான செயல்கள் நம்முடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் சிதைக்கிறது என்று சொல்லுவதில் தவறில்லை. ஏனென்றால், பாவகரமான நடவடிக்கைகள் நம்முடைய சரீரங்களின் நலனைப் பாதிப்பதோடு, நம்முடைய ஆத்துமாவையும் சீரழிக்கிறது. பாவவாழ்க்கையினால் நமக்கு வரும் விளைவுகள் மரணத்தைவிட மோசமானது. மனிதர்களுக்கு மிகப்பெரிய துயரத்தை ஏற்படுத்தக்கூடியது, மரணமல்ல, மன்னிப்பைப் பெறாமல் மரணமடைவதுதான் என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

> *இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார். (யோவான் 8:21).*

மூன்றாவது, பாவத்தினால் வரும் தீங்கு, பிசாசைவிட மோசமானது. ஏனென்றால், பாவகரமான செயலே பிசாசு தோன்றக் காரணமாக அமைந்தது. சாத்தானை, கேடான தேவதூதனாக கடவுள் படைக்கவில்லை. தன்னைப் படைத்த கடவுளுக்கு எதிராகச் செய்த பாவகரமான செயலின் காரணமாக பிசாசு கேடான நிலையில் இருக்கிறான்.

> *தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். (யூதா 6)*

> *பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து; (2 பேதுரு 2:4).*

ஆகவே, நாம் பாவம் செய்கிறபோது, பிசாசைவிட மோசமானவர்களாக இருக்கிறோம் என்பதைச் சுட்டுகிறோம்.

அ. பிசாசு நம்மை சோதிப்பான், ஆனால் சோதனையே பாவமல்ல. சோதனைக்கு அடிப்பணிந்து நாம் கேடான செயல்களைச் செய்கிறபோதுதான், பாவிகளுக்கான தீங்கு நம்மை வந்தடைகிறது. கேடாக நடக்கும்படி பிசாசு

நம்மைச் சோதிக்கலாம். ஆனால் அந்தக் கேட்டைச் செய்யும்படி அவன் நம்மைக் கட்டாயப்படுத்தி அதற்குள் தள்ளுவதில்லை. பாவத்திற்கு சாய்ந்துபோகும் நம்முடைய இருதயமே, நாம் பாவம் செய்வதற்குக் காரணமாக இருக்கிறது.

> அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். (யாக்கோபு 1:14).

பிசாசு சோதித்தாலும் சோதிக்காவிட்டாலும், பாவத்திற்கு வளைந்து கொடுக்கிற விதத்தில்தான் எல்லா மனிதர்களும் இருக்கிறார்கள், விசுவாசிகளும்கூட. ஹிப்போவின் ஆகஸ்டின் என்ற பழம்பெரும் சபை பிதாக்களில் ஒருவர். அவர் இவ்வாறாக ஜெபிப்பார்,

> "தீய மனிதனிலிருந்து என்னை விடுவியும். அந்தத் தீயமனிதனே நான்தான்".

பாவத்திற்கு வளைந்துகொடுக்கும் நம்முடைய சொந்தப் பாவத் தன்மையைவிட மோசமானது எதுவும் இல்லை. நாமோ, பிசாசோகூட அந்தளவுக்கு மோசமானவர்கள் அல்ல.

ஆ. சாத்தான் நம்மைச் சோதிக்கலாம், தொல்லையும் கொடுக்கலாம். சாத்தானைக் "கெர்ச்சிக்கிற சிங்கம்" என்ற வேதம் விவரிக்கிறது.

> தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். (1 பேதுரு 5:8).

சாத்தான், நமக்கு வெளியிலிருந்துதான், நம்மைச் சோதிப்பதையும், நமக்குத் தொல்லை கொடுப்பதையும் செய்கிறான். ஆனால் அவன் நமக்குள்ளாக வந்து வாழ்ந்து நம்மைப் பாவம் செய்ய வைப்பதில்லை. நம்முடைய சொந்தப் பாவத்தன்மையே நம்மிலிருந்து நம்மைப் பாவம் செய்யவைக்கிறது. ஆகவே, அந்தப் பாவத்தன்மை, பிசாசையும்விட மோசமானது.

நான்காவது, மன்னிப்பைப் பெறாத பாவியின் சொந்த மனச்சாட்சியே, பிசாசைவிட நரகத்தில் ஒருவனை அதிகமான வேதனைக்குள்ளாக்கும். பாவியான மனிதன், தன்னுடைய சொந்தப் பாவச் செயலின் காரணமாகத் தான் நரகத்தில் இருக்கிறேன் என்பதை அறிவான். அதனால் அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்தி வேதனைக்குள்ளாக்கும். ஆகவே மனிதர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும், மரணத்தையும், சாத்தானையும், நரகத்தையும்விட பாவமே மோசமானது என்பது உறுதியாகத் தெரிகிறது.

பாவியான மனிதனை, கடவுள் கிறிஸ்துவுக்குள்ளாக மன்னிப்பதும், பாவத்தின் சகல தொடர்விளைவுகளிலிருந்தும் மீட்பதுமாகிய செயல், எந்தளவுக்கு நன்மையானது என்பதை நாம் இப்போது ஆராயலாம்.

*பாவம் எல்லாவற்றையும்விட நமக்கு மிகவும் தீமையானது, மிகவும் தீங்கிழைக்கக்கூடியது என்று இதுவரை நான் விளக்கினேன். அதைப்பற்றி மேலும் அதிகமாக மறுபடியும் விளக்குகிறேன்.*

*அ. பாவத்தினால் உலகத்திலிருந்து வருகிற எல்லா நன்மையைக் காட்டிலும், அதனால் வருகிற தீமையே மிக அதிகம். நாம் நோயுற்றால், அதிலிருந்து நாம் குணமடைவதற்கு, நாம் வாழுகிற இந்த உலகத்தில் அநேக மருந்துகள் உண்டு. ஆனால் நம்முடைய பாவ நோயைக் குணப்படுத்த எந்தவொரு மருந்தும் இந்த உலகத்தில் இல்லை. கடவுளின் அருளும் அவருடைய கிருபையுள்ள மன்னிப்பும் மட்டுமே அதற்கான ஒரே தீர்வு. பாவமற்ற தேவதூதர்களும் நமக்கு உதவமுடியாது. கடவுள் மட்டுமே நம்மை மறுபடியுமாக உருவாக்குகிறார். அதையே வேதம் "புது சிருஷ்டி" என்று குறிப்பிடுகிறது.*

> *மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபேசியர் 4:24).*

*இதையே தாவீது இராஜா "சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்" என்று ஜெபித்தார்.*

> *தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். (சங்கீதம் 51:10).*

*ஆ. நம்முடைய கேடான செயல்களிலிருந்து நாம் மனந்திரும்பவேண்டும். நம்முடைய பல தவறான செயல்களின் காரணமாக நாம் கவலைப்படலாம், வேதனைப்படலாம், அல்லது துக்கப்படலாம். ஆனால் நம்முடைய எல்லாக் கேடான செயல்களிலிருந்து நாம் மனந்திரும்பவேண்டும் என்பதையே கடவுள் வலியுறுத்துகிறார். அதாவது, பாவத்தையும், அதன் அசிங்கத்தையும், அதன் கேட்டையும், கடவுளிடம் அறிக்கையிட வேண்டும். யாருக்காவது நாம் தீமை செய்திருந்தால், அதைச் சரிசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். அதுபோன்ற தீமையை மறுபடியும் செய்யாதிருக்கவேண்டும். மனந்திரும்புதல் என்பது தீவிரமான கண்டிப்பையும், கேட்டைவிட்டு விலகுவதையும் தன்னில் உள்ளடக்கியிருக்கிறது. இப்படித் தீவிரம் காட்டுவதே, பாவத்தினால் வருகிற தீங்கு எவ்வளவு மோசமானது என்பதை நமக்குக் காட்டுகிறது.*

*இ. ஒரு மனிதன் பாவம் செய்வதை வாழ்க்கையில் தொடருகிறவனாக இருந்தால், அவனைப் பாவம் செய்வதற்கே கடவுள் விட்டுவிட்டார் என்பதை அது காட்டுகிறது. இது பற்றி மூன்று முறை ரோமர் 1ஆவது அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.*

> *இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:24)*

*இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். (ரோமர் 1:26)*

*தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:28).*

கடவுள் நம்மைத் தொடர்ந்து வற்புறுத்தியும், அதற்கெதிராக ஒருவன் தொடர்ந்து பாவத்தைச்செய்து வாழ்ந்தால், அவன் கடவுளிடம் திரும்புவதிலிருந்து விலகிப் போய்க்கொண்டிருக்கிறான் என்பதையே அது காட்டுகிறது. இந்தளவுக்குப் பாவம் கேடானது.

ஈ. கேடான மனிதர்கள் செய்யும் பாவத்தின் காரணமாக, கடவுள் அவர்களை வெறுக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

*வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர். (சங்கீதம் 5:5)*

*ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே. (நீதிமொழிகள் 6:16–19).*

கடவுள் அன்புள்ளவராக இருந்தாலும், பாவத்தின் கேடான தன்மை, அவரில் வெறுப்புணர்வை ஏற்படுத்துகிறது. பாவத்தின் கேட்டை விவரிப்பதற்கு, இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

உ. தெய்வீகமும் மனிதத் தன்மையும் கொண்ட, தனித்துவமான நபராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே பாவத்திற்கான ஒரே சிறந்த இரட்சகர். ஆகவே அவர் தருகிற இரட்சிப்பு மட்டுமே சிறந்த இரட்சிப்பு. ஒரு பாவியை மீட்க மிகச்சிறப்பான இரட்சகர் ஒருவர் தேவையாக இருந்தால், பாவமே எல்லாத் தீமைகளிலும் மோசமான தீமையாக இருக்கவேண்டும்.

பாவமே எல்லாத் தீமையிலும் மோசமான தீமை என்பதை நான் இதுவரை விளக்கியவற்றிலிருந்து நீங்களும் ஒப்புகொள்ளுவீர்கள் என்று நான் நம்புகிறேன். பாவத்தினுடைய கேடான தன்மையோடு வேறெதையும் ஒப்பிடவே முடியாது.

இதுவரை நாம் படித்த இந்த உண்மை, கடவுளைப் பற்றியும் நம்மைப் பற்றியும் என்ன சொல்லுகிறது என்பதை இனி நான் விளக்குகிறேன்.

**2. கடவுளுடைய பொறுமை எந்தளவுக்கு ஆச்சரியமானது என்பதை இதிலிருந்து நாம் கற்கிறோம்.**

*பாவம் மிகவும் கேடுள்ளதாகவும், கடவுளுக்கு எதிரானதாகவும் இருப்பதால், நிச்சயமாக கடவுளுடைய நீடிய பொறுமை மிகப்பெரியதும் ஆச்சரியமுமானதுதான். கடவுள், தனக்கு எதிராக இருக்கிற பாவிகளை, அவருடைய எதிரிகளை, தன்னிடம் ஒப்புரவாகும்படி அழைப்பது, மனித சிந்தனையால் புரிந்துகொள்ள முடியாத, கடவுளின் ஆச்சரியமான பொறுமையின் அடையாளமாக இருக்கிறது. பாவிகள் தன்னையும் தன்னுடைய அன்பையும் நிராகரித்தபோதும், கடவுள் தொடர்ந்து, பாவிகள் மனந்திரும்பவேண்டும் என்று தம்முடைய குமாரனுடைய வாழ்க்கை மற்றும் மரணத்தின் மூலமாக தன்னுடைய அன்பைக் காட்டி அறைகூவலிடுவது, அவருடைய பொறுமை மாபெரும் அற்புதம் என்பதையே காட்டுகிறது.*

> *“நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை” (புலம்பல் 3:22).*

*அ. உலகத்திலுள்ள பாவிகளின் எண்ணிக்கையைப் பற்றிச் சிறிது சிந்தியுங்கள். உலகத்தில் பாவிகள் சிறிய தொகையினராக இருந்தால், கடவுள் ஏன் இந்தளவுக்குப் பொறுமையாக இருக்கிறார் என்பதை ஓரளவுக்கு நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் உலகம் முழுவதுமே பாவத்தின் கீழ்தான் இருக்கிறது.*

> *நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம். (1 யோவான் 5:19).*

*பாவம் செய்யாத, இதுவரை பாவமே செய்திராத ஒருவன்கூட இல்லை. அப்படியானால், கடவுளின் பொறுமை எந்தளவுக்கு ஆச்சரியமானது என்பதை எண்ணிப் பாருங்கள்.*

*ஆ. ஒருவேளை, உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒரேயொரு முறை மட்டுமே பாவம் செய்திருந்தால், அது குறித்து இந்தளவுக்கு நாம் ஆராயவேண்டிய அவசியம் நமக்கு இருந்திருக்காது. ஆனால் நாம் அனைவரும், ஒவ்வொரு நாளும் எத்தனையோ விதங்களில் கடவுளுக்கு வெறுப்புண்டாக்குகிற காரியங்களைச் செய்கிறோம். இது மனித குலத்தின் முதல் ஜோடி, தன்னைப் படைத்தவருக்குக் கீழ்ப்படியாமல்போன அந்த நிகழ்விலிருந்து, காலங்காலமாகத் தொடருகிறதாக இருக்கிறது. இது உண்மையிலே கடவுளின் பொறுமை அற்புதமானது என்பதையே காட்டுகிறது.*

*இ. ஒருவிதத்தில், நம்முடைய பாவங்கள், கடவுளை நோக்கி நமக்கெதிராகக் கதறுகிறது என்று சொல்லலாம்.*

> *அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது. (ஆதியாகமம் 4:10).*

*நம்முடைய எதிரியாகிய பிசாசானவன், நம்முடைய தவறான செயல்களை அதிகரிக்கச் செய்வதிலேயே ஆர்வமாக இருக்கிறான். இருப்பினும், கடவுள் நம்முடைய கேடான செயல்களின் காரணமாக நம்மை அழிக்காமல், தம்முடைய இரக்கமுள்ள கைகளை நம்மை நோக்கி நீட்டியபடியே இருக்கிறார். அவருக்கெதிரானவர்களாக நாம் தொடர்ந்து வாழ்ந்து வந்தால், நமக்கு வரவிருக்கும் நித்திய தண்டனையை அவர் நமக்கு நினைவுறுத்தி நம்மை எச்சரிக்கை செய்கிறார்.*

*ஈ. கடவுள் நமக்கு நன்மையான காரியங்களைச் செய்துவந்தபோதும், நாம் தொடர்ந்து கேடான காரியங்களைச் செய்து வருவது, நம்முடைய பாவகரமான செயல்களின் கேட்டை அதிகரிக்கச் செய்கிறது.*

> *அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? (ரோமர் 2:4).*

*வாக்குறுதி அளித்தும் தீர்மானங்களை எடுத்தும், அவற்றை நிறைவேற்றாமலேயே நாம் தொடர்ந்திருக்கிறோம். உடல்நலக் குறைவு ஏற்படுகிறபோது, இனி திருந்தி வாழுவேன் என்று சொல்லுகிறோம், ஆனால் சுகமடைந்தபிறகு, திருந்திய வாழ்க்கை வாழ்வதில்லை. இந்தவிதத்தில், நாம் கேடான செயல்களைச் செய்கிறது மட்டுமல்லாமல், நம்மிலுள்ள கேட்டை மேலும் அதிகரிக்கவே செய்கிறோம். ஏனென்றால், நாம் என்ன செய்யவேண்டும் என்பது நமக்குத் தெரிந்திருந்தும் அதை நாம் செய்வதில்லை. இருந்தபோதும், கடவுள் கிருபையுள்ளவராகவே இருந்து வருகிறார். ஆகவே, பாவத்தினுடைய தீமையின் அதிகரிப்பில், கடவுளுடைய நீடிய பொறுமையினால், அவருடைய கிருபையின் மகத்துவத்தை நாம் காண்கிறோம்.*

### 3. பாவத்திற்கான கடவுளுடைய தண்டனை நீதியானது என்று நாம் அறிகிறோம்.

*நாம் நினைப்பதைவிட கடவுள் மிகவும் பொறுமையுள்ளவர். சிலவேளையில், நாம் நம்முடைய பாவகரமான செயல்களைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால், மனந்திரும்பாத பாவச்செயல்களை அவர் தண்டிக்கிறார். பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்பாத யாவரும், தண்டனையைப் பெறுகிறார்கள். ஆகவே கடவுள் பாவத்திற்கான தண்டனையை வழங்குகிறாரே தவிர, அதற்கு மேலாக அவர் எவரையும் தண்டிப்பதில்லை.*

*அ. கடவுள் யார் என்பதை எண்ணிப் பாருங்கள். கடவுள் தாம் செய்யும் அனைத்திலும் நீதியுள்ளவர். நீதியான காரியங்களைத் தவிர்த்து வேறு எதையும் அவர் செய்யமுடியாது.*

> *“சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ” (ஆதியாகமம் 18:25).*

*காயின், தனக்கு வழங்கப்பட்ட தண்டனை, தன்னால் தாங்க முடியாதளவுக்கு அதிகமானது என்றான்.*

*அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. (ஆதியாகமம் 4:13)*

ஆனால் தான் அந்த தண்டனையை அடைய வேண்டியவன் என்பதை அவன் ஏற்கவேண்டியிருந்தது. ஏவாள் சாத்தான்மீது புகார் தெரிவித்தாள்.

*அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை வஞ் சித்தது, நான் புசித்தேன் என்றாள். (ஆதியாகமம் 3:13).*

சாத்தான் நிச்சயமாக நம்மைச் சோதிப்பான், ஆனால் அவன் நம்மைக் கட்டாயப்படுத்தி பாவகரமான செயலில் ஈடுபட வைப்பதில்லை. சோதனைகளைச் சந்திப்பதை நாம் தவிர்த்துக்கொள்ள முடியாது. ஆனால் பாவஞ் செய்வதிலிருந்து நாம் விலகியிருக்க முடியும். கடவுளுக்கு எதிராகவும் நாம் குறைகூற முடியாது.

*அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். (ஆதியாகமம் 3:12).*

கடவுள் முதல் மனித ஜோடியை, அவர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கான சூழலில்தான் அவர்களை வைத்தார். அவர்கள் எதைச் செய்யக்கூடாது என்பதைப் பற்றி கடவுள் அவர்களை எச்சரிக்கவில்லையா? தமக்குக் கீழ்ப்படியாமல் போனால் அதனால் வரக்கூடிய விளைவுகளைப் பற்றி அவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கவில்லையா?

*பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். (ஆதியாகமம் 2:17).*

நாம் எப்படி வாழவேண்டும் என்பதை கடவுள் வேதத்தில் தெளிவாக விளக்கியிருக்கிறார். நம்முடைய ஒழுங்கற்ற வாழ்க்கைக்கான தண்டனையை நாம் அடைகிறபோது, கடவுளை எப்படிக் குறை சொல்லமுடியும்?

ஆ. பாவம் எப்படிப்பட்டது என்பதை எண்ணிப்பாருங்கள். பாவமும் தீமையும் கடவுளுக்கு எதிரானது. ஆகவே, பாவிகள் விரும்பி, தமக்கு எதிராகச் செய்யும் அநீதியான செயலுக்கு ஏற்றதைச் செய்வது கடவுளின் நீதியான செயல்.

*“கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறி கிறவருமாயிருக்கிறேன்.” (எரேமியா 17:10)*

*இ. அவிசுவாசிகளின் நிலையை எண்ணிப்பாருங்கள். நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பாமல் மரிக்கும்போது, நித்தியத்திற்கும் பாவத்தன்மையோடு வாழும் தண்டனையைப் பெறுவோம். நித்தியத்திற்கும் பாவத் தன்மையோடு இருப்பவர்களை நித்தியத்திற்கும் தண்டிப்பது எப்படி முறையற்றதாகும்? கடவுளுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் வாழ்ந்து, தன்னுடைய பாவத்தின் கடனை கடவுளுக்கு ஏற்றவிதத்தில் திரும்பக் கட்டுகிறவன் அவற்றிலிருந்து விடுதலை பெறுகிறான். ஆனால் தன்னுடைய கடனை திரும்பச் செலுத்தமாட்டேன் என்று சொல்லுகிறவர்கள், தங்களுடைய கேடான நிலைக்கான முடிவைத் தாங்களே ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அவர்கள் கடவுளிடம் மன்னிப்பிற்காக முறையிட முடியாது. தன் பாவத்தை உணர்ந்து, வருந்தி, மனந்திரும்பாத ஒருவனுக்காக கிறிஸ்து மரிக்கவில்லை. கடவுளுடைய இரக்கத்திற்காக, தன்னுடைய பாவத்திலிருந்து மனந்திரும்பி வருகிறவர்களுக்காகவே கிறிஸ்து மரித்தார். கிறிஸ்துவின் மூலமாக வருகிற கடவுளின் கிருபையை மறுத்தால், அதற்கான பலனை அவர்கள் பெறுவார்கள். கடவுள், தம்முடைய இரக்கத்தை நிராகரிக்கிறவர்களைத் தண்டிப்பது அநீதியான செயலல்ல. அதேவேளையில், தம்மைத் தேடுகிறவர்களுக்குக் கடவுள் இரக்கத்தையே காட்ட விரும்புகிறார்.*

## 4. நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறுவது எத்தனை ஆச்சரியமானது!

*பாவம் எந்தளவுக்குக் கடவுளுக்கு எதிரானது என்பதை நாம் ஆராய்ந்திருக்கிறோம். இருந்தும், கடவுள் பாவியான மனிதனுடைய பாவத்தை மன்னிக்கிறார் என்பது எத்தனை ஆச்சரியமானது. கடவுளுடைய இரக்கத்தின் சிறப்புகளைப் பின்வரும் விதங்களில் நாம் அறியலாம்.*

*அ. பாவத்திற்கான மன்னிப்பை வழங்கும் இரக்கம் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதமாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் கடவுள், இஸ்ரவேல் மக்கள் கடவுளுடைய ஆசீர்வாதத்தைப்பெற, தம்முடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அது கிரியைகளின் உடன்படிக்கை. ஆனால் கிறிஸ்துவினுடைய வாழ்க்கை மற்றும் மரணத்தின் மூலமாக, கடவுள் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி, எந்த மனிதனும் தன்னுடைய இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை விசுவாசிக்கிறபோது, புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை அடையச்செய்கிறார். இந்தப் புதிய உடன்படிக்கை சிறப்பானது. ஏனென்றால், இது கடவுளுடைய கிருபையினால், கிறிஸ்துவின் மூலமாக, இலவசமான பாவ மன்னிப்பாகிய சிறப்பான ஆசீர்வாதத்தை கிறிஸ்துவை விசுவாசிக் கிறவர்களுக்கு வழங்குகிறது.*

> *இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழைத்திருந்ததானால்,*

*இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்தநாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எபிரெயர் 8:6–12).*

இது கிறிஸ்துவினுடைய செயலின் மூலமாக விசுவாசிகளுக்கு வரும் ஆசீர்வாதமே தவிர, மனிதர்களுடைய செயலினால் வருவதல்ல. கிறிஸ்து, பிதாவினுடைய சித்தத்திற்கு ஏற்றபடி பரிபூரணமான வாழ்க்கையை வாழ்ந்தார். தன்னை விசுவாசிக்கிறவர்களுக்கான, முழுமையான பலியாக, பரிபூரண வாழ்க்கை வாழ்ந்த அவர் சிலுவையில் பலியானார்.

*உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. (1 பேதுரு 1:18–19).*

ஆ. இந்தப் பாவமன்னிப்பு, விசுவாசிகளுடைய ஆத்துமாவுக்கு ஆறுதலைத் தருகிறது. தன்னுடைய பாவகரமான செயலினால் குற்ற வுணர்வுக்குள்ளானவர்கள், தங்களுடைய ஆத்துமாவில் இளைப்பாறுதலைப் பெறுகிறார்கள். கடவுளுடைய கோபத்தைக் குறித்து அவர்கள் எப்போதும் பயப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமாக தன்னுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கிடைத்திருப்பதை உணர்ந்தவன், கடவுளோடு தனக்கு சமாதானம் ஏற்பட்டிருப்பதை அறிவான்.

*இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1).*

பாவத்தைப் பற்றிய அறிவு நம்மை பெலவீனப்படுத்துகிறது. ஆனால் பாவமன்னிப்பைப் பற்றிய அறிவு நம்மை பெலனடையச் செய்கிறது. கேடான வாழ்க்கை பரிசுத்தமும் பரிபூரணமுமான கடவுளுக்கு எதிரானது என்றும், நமக்குத் தீங்கு ஏற்படுத்தக்கூடியது என்பதையும் அறிகிறபோது, ஒரு பாவியைக் கடவுள் மன்னிக்கிறார் என்ற கடவுளுடைய செயல் அற்புதமானது என்றுதான் சொல்லவேண்டும். நம்மில் நாமே செய்துகொள்ள முடியாததும், கடவுள் இதைச் செய்வார் என்று நாம் எதிர்பார்க்க முடியாததுமானதை, கடவுள் நமக்காகச் செய்திருக்கிறார். அதுவும் தம்முடைய குமாரனுடைய மரணத்தின் மூலமாகச் செய்திருக்கிறார். இது குறித்து மீகா தீர்க்கதரிசி வியப்படைந்ததில் ஆச்சரியமில்லை,

*"தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்." (மீகா 7:18).*

பாவம் எந்தளவுக்குத் தீமையானது என்பதை இப்போது நாம் அறிந்திருக்கிறோம். பாவகரமான எந்தவொரு செயலையும் நாம் ஒருபோதும் செய்யக்கூடாது என்பதையே இது நமக்குக் காட்டுகிறது. பாவகரமான செயல்கள், கடவுளுடைய சித்தத்திற்கு எதிரானவை, அவருடைய பரிசுத்தத்திற்கு எதிரானவை, அவருடைய அதிகாரத்திற்கு எதிரானவை, அத்தோடு, நமக்குத் தீங்கிழைக்கக் கூடியவை. பாவகரமான சிலசெயல்களின் மூலமாக, நமக்கு எவ்வளவுதான் நன்மை ஏற்பட்டாலும், அல்லது, அந்தவேளையில் எவ்வளவுதான் இன்பத்தை அது தந்தாலும், பாவம் செய்வதை எந்தவிதத்திலும் நாம் நியாயப்படுத்த முடியாது. ஏனென்றால், அது நம்மைப் படைத்தவரும், பரலோக பிதாவுமாகிய கடவுளுக்கு எதிரானது. கேடான செயலைச் செய்யலாமா கூடாதா என்ற விவாதத்தில்கூட நாம் ஒருபோதும் ஈடுபடக்கூடாது. இரண்டு ஆச்சரியமான காரியங்கள் உண்டு. ஒன்று, கடவுள் நமக்கு அதிகமான நன்மையைச் செய்திருக்கிறார், அதனால் அவருக்கு எதிராக யார்தான் தீமை செய்வார்கள். இன்னொன்று, நல்லவரான அந்தக் கடவுளுக்கு எதிராக நாமே தீமை செய்கிறோம். பரிசுத்த வாழ்க்கை வாழ்வதைப் போன்ற அழகான காரியம் கடவுளுடைய பார்வையில் வேறெதுவும் இல்லை. அதுவே நமக்கு நன்மையை ஏற்படுத்தக் கூடியது. இத்தனையையும் மீறி நாம் எப்படிக் கவனக்குறைவாகக்கூட பாவத்தைச் செய்துவிட முடியும்?

பாவகரமான செயல்கள், கடவுளுடைய சித்தத்திற்கு எதிரானவை, அவருடைய பரிசுத்தத்திற்கு எதிரானவை, அவருடைய அதிகாரத்திற்கு எதிரானவை

# சீர்திருத்த வெளியீடுகள்

| எண் | புத்தகத்தின் பெயர் | ஆசிரியர் | விலை (இந்திய ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 40.00 |
| 2. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 20.00 |
| 3. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 80.00 |
| 4. | சிறுவர்களுக்கான வேத உபதேசம் | ஆர். பாலா | 20.00 |
| 5. | குடும்ப ஆராதனை | ஆர். பாலா | 20.00 |
| 6. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 90.00 |
| 7. | ஆதிசபையின் அற்புத வரங்கள் | ஆர். பாலா | 80.00 |
| 8. | திருச்சபை வரலாறு (பாகம் 1) | ஆர். பாலா | 100.00 |
| 9. | திருச்சபை வரலாறு (பாகம் 2) | ஆர். பாலா | 100.00 |
| 10. | ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு | ஜெ. சி. ரைல் | 50.00 |
| 11. | கிறிஸ்தவ வினாவிடைப் போதனைகள் | ஆர். பாலா | 80.00 |
| 12. | உப்புத் தன் சாரத்தை இழந்தால் . . . | மொரிஸ் ரொபட்ஸ் | 15.00 |
| 13. | மதில் மேல் பூனை | A.N. மார்டின் | 15.00 |
| 14. | இயேசுவிடம் வர ஏன் சிலருக்கு மனதில்லை? | A.N. மார்டின் | 15.00 |
| 15. | உன்னைப்பற்றிய குற்றப்பதிவேடும் உனக்குள்ளிருக்கும் பொல்லாத இருதயமும் | A.N. மார்டின் | 15.00 |
| 16. | சீர்திருத்த விசுவாசமும் கிருபையின் போதனைகளும் | ஆர். பாலா | 60.00 |
| 17. | கிறிஸ்தவன் யார்? | A.N. மார்டின் | 40.00 |
| 18. | வில்லியம் கேரி | ஆர். பாலா | 80.00 |
| 19. | ஜோன் பனியன் | ஜெரமி வாக்கர் | 40.00 |
| 20. | ஜோன் ஓவன் | ஜெரமி வாக்கர் | 40.00 |
| 21. | இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு | ஆர். பாலா | 90.00 |
| 22. | 1689 விசுவாச அறிக்கை | ஆர். பாலா | 60.00 |
| 23. | சட்டையை விற்றாவது புத்தகத்தை வாங்கு | ஆர். பாலா | 80.00 |
| 24. | சீர்திருத்த இறையியலின் தந்தை - ஜோன் கல்வின் | ஆர். பாலா | 80.00 |
| 25. | தேவபயம் | A.N. மார்டின் | 140.00 |
| 26. | தேவகோபம் | ஆர். பாலா | 140.00 |
| 27. | பக்திவைராக்கியம் | டேவிட் மெரேக் | 180.00 |
| 28. | பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் | ஆர். பாலா | 90.00 |

**திரு. K. அருள் செல்வம்,** 4/630, கிருபை இல்லம், ஆண்டவர் நகர், நாமக்கல் 637002. கைப்பேசி: +91 9443798315

**போதகர் S.D. ஜெரால்டு, (கிருபை சபை),** 34C, கிருபை இல்லம், நாயக்கமார் தெரு, பைக்காரா, மதுரை 625004. கைப்பேசி: +91 9994874077

**போதகர் T. அண்ணாதுரை, (கிருபை சுவிசேஷ சபை),** வீரியபாளையம் (PO), பஞ்சப்பட்டி (via), K.R. புரம் (TK), கரூர் 639119. கைப்பேசி: +91 9789741732

**போதகர் A. முரளி, (கிருபை சீர்திருத்த பாப்திஸ்து சபை),** 22 LN ரெட்டி கார்டன், கரியானபால்யா, லிங்கராஜாபுரம், பெங்களூரு 560084. கைப்பேசி: +91 9743246003

**போதகர் M. ஜேம்ஸ், (கிருபை சீர்திருத்த சபை),** 6/87 காமராஜர் தெரு, திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை 600023. கைப்பேசி: +91 9445671113

**ஸ்ரீ லங்காவிலுள்ளவர்கள் திருமறைத்தீபம் இதழைப் பெற கீழுள்ள முகவரிகளோடு தொடர்புகொள்ளவும்:**

**கிருபை வேதாகம சபை,** 19 இராஜசிங்க வீதி, கொழும்பு, ஸ்ரீ லங்கா. தொலைபேசி: 2503519

**திருமதி கிரேசிலின் மஸ்கிறெங்ஙு,** 25 ஷொ ரோடு, கொழும்பு 13, ஸ்ரீ லங்கா. தொலைபேசி: 2345654; கைப்பேசி: 0725605845

**Rev. S.N. பார்த்தீபன்,** 195/1 ஸ்டேசன் வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா, ஸ்ரீ லங்கா. தொலைபேசி: 024 2226977; கைப்பேசி: 0777577766

## புதிய வெளியீடுகள்




- திருமறைத்தீபம் சிறப்பு இதழ் 2018-2020 (ரூ. 750)
- பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் (ரூ. 90)
- பக்திவைராக்கியம் (ரூ. 180)
- பியூரிட்டன்களின் பார்வையில் மனந்திரும்புதல் (ரூ. 200)

## திருமறைத்தீபம் KINDLE செயலியில்




திருமறைத்தீபம் இதழ்களை இனிக் கின்டில் (**Kindle**) செயலியில் வாசிக்கலாம். **Amazon.com** வலைத்தளத்தின் வாயிலாக இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

Available on amazonkindle

## திருமறைத்தீபம் சிறப்புப் பதிப்புகள்




**1995-2001**
**910** பக்கங்கள், ரூ. **950**

**2002-2004**
**610** பக்கங்கள், ரூ. **750**

**2005-2007**
**604** பக்கங்கள், ரூ. **750**

**2008-2010**
**604** பக்கங்கள், ரூ. **750**

**2011-2014**
**792** பக்கங்கள், ரூ. **950**

**2015-2017**
**608** பக்கங்கள், ரூ. **750**

**2018-2020**
**544** பக்கங்கள், ரூ. **750**

உங்கள் பிரதிக்கு தொடர்புகொள்ளுங்கள்:
சீர்திருத்த வெளியீடுகள், சென்னை
**+91 9445671113**

# திருமறைத்தீபம்

மலர் 27 அக்டோபர் - டிசம்பர் 2021 இதழ் 4


1. வரலாற்றுக் கல்வினிசமும், கல்வினிச ஐம்போதனைகளும் 1
2. போலிப்போதனைகளுக்கு விலகி நில்லுங்கள் 17
3. பாவத்தின் தன்மையை அறிவதால் வரும் பயன்கள் 34


## திருமறைத்தீபம் இணைய தளம்




- ☛ திருமறைத்தீபம் (PDF/Unicode)
- ☛ தமிழ் ஆடியோ, வீடியோ பிரசங்கங்கள்
- ☛ கிறிஸ்தவ இலக்கியங்கள்
- ☛ இறையியல் பூங்கா

இத்தளம் பற்றிய உங்கள் கருத்துக்களையும் எங்களுக்குத் தெரிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும்விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.

**http://www.biblelamp.org (or) www.biblelamp.me**




திருமறைத்தீப ஆசிரியரின் பிரசங்கங்கள் மற்றும் வேதபாடங்களைத் தற்போது YouTube ல் கேட்கலாம்.

திருமறைத்தீபம் YouTube TV

@Biblelamp